THE HINDU
11 APR 2024

# First-time voters in T.N. postpone vacation to exercise their franchise

The Election Commission of India has identified nearly 10.92 lakh electors aged 18-19 in the State. Awareness activities in the city's educational institutions to encourage young electors to vote in the upcoming Lok Sabha poll will continue till April 17


K. Lakshmi
CHENNAI

With election day around the corner in Tamil Nadu, many first-time voters have either postponed their vacation or plan to take a short break from studies to travel to their hometowns in order to vote in the upcoming Lok Sabha election. Some of them who have registered in the electoral rolls are waiting to receive their voter identity cards.

Several youngsters who recently turned 18 are all eager to exercise their franchise for the first time. The Election Commission of India (EC) has identified nearly 10.92 lakh electors aged 18-19 in Tamil Nadu.

Rayhan Zubaidha, an 18-year-old resident of Egmore, said: "I feel like an adult now with a responsibility. I must be careful in choosing the right symbol, and I don't want to miss the chance."

Many noted that they would consult their parents and friends on the current political scenario and candidates. N. Afreen, a college student in Nungambakkam, said she was happy to receive her voter ID card and had since updated herself about the Chennai Central constituency, where she resides, through newspapers and discussions with her parents.




**Spreading the message:** Sand art on Marina beach as part of the Greater Chennai Corporation's voter awareness initiative. R. RAGU

Some like P. Merlin Carol, a resident of Ekkaduthangal, have postponed their vacation to be in the city to cast their vote and take a selfie with the indelible ink on their finger. "I am glad that I am getting a chance to vote within a few months of turning 18. I have an idea about electronic voting machines and how to vote. My parents are also on election duty this time, and I decided to stay in the city this vacation," she added.

Several students in outstation colleges are also keen on travelling to their hometowns to cast their votes. Krithik Jayen B., a first- year B. Tech student in Coimbatore, is set to travel to Tirunelveli to vote. "I have been looking forward to this since childhood and got updates from parents. I learnt about what qualities to look for in a candidate and the voting process through classes," he said.


While some people such as S. Swetha of Avadi are waiting for their voter ID, others have missed their right to vote, as they will turn 18 a few days after the election.

Samyuktha Ramana, 19, a Mylapore resident, believes every vote can make a difference. She hopes the government will ensure women's safety, change perceptions of transpersons in society, and include Indian sign language in the school syllabus.

Some of the first-time voters, however, said they would vote based on their parents' choice. Jen, a second-year college student in Guindy, said she barely had time for politics as academics took up most of her time. In Chennai district, awareness activities in government colleges and industrial training institute campuses to encourage young electors will continue till April 17. "Slogans such as 'My Vote is My Right' and 'Voting is My Responsibility" were popularised through the use of music and dance in public spaces as well," said District Election Officer J. Radhakrishnan. *(With inputs from R. Aishwaryaa)*

தினகரன்

11 APR 2024




▶ நாடாளுமன்ற தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தும் வகையில் ஆழ்கடல் நீச்சல் பயிற்சியாளர் அரவிந்த தருண் ஸ்ரீ என்பவர் நீலாங்கரை அருகே கடலில் 60 அடி ஆழத்தில் நீந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

Awareness in the Deep Blue sea by Thiru Aravind Tharun Shree - Sea Swimming coach.

தினமணி

11 APR 2024

# 100% வாக்குப் பதிவு: கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வு

சென்னை, ஏப். 10: சென்னையில் உள்ள கல்லூரி மாணவர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து புதன்கிழமை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில் சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு உறுதி மொழி ஏற்றனர். தொடர்ந்து கல்லூரி மாணவர்கள் தேர்தல் விழிப்புணர்வுப் பேரணி சென்றனர். இதையடுத்து கிண்டியில் உள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஜெ.ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியது: மக்களவைத் தேர்தலில் முதல் முறை வாக்களிக்கவுள்ள மாணவர்கள் அனைவரும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையில் கட்டாயம் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது நமது கடமை மட்டுமல்ல, நமது உரிமையும்கூட. இந்த நாடு நமக்கு அளித்த உரிமையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

மேலும், தேர்தலில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து உங்கள் பெற்றோர், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் தேர்தல் நடத்தும் அலுவலர் எம்.பி.அமித், மண்டல அலுவலர் சீனிவாசன், கல்லூரி முதல்வர் மலர்விழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

DEO_chennai conducts election Awareness Rally to emphasizing 100% vote.

தினத்தந்தி
11 APR 2024

# விழிப்புணர்வு பதாகை




தமிழகம் முழுவதும் வரும் 19–ந் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வதற்காக தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சென்னை தியாகராயநகர் ஜீவா பூங்காவில் விழிப்புணர்வு பதாகை வைத்துள்ளதை படத்தில் காணலாம்.

Awareness Banners at public places to emphasizing 100% vote

THE HINDU

11 APR 2024

# Anonymous political posters, hoardings not allowed, says EC

The Hindu Bureau
NEW DELHI

Cracking down on anonymous political hoardings, the Election Commission (EC) on Wednesday sought the disclosure of names of their publishers and printers for traceability and accountability.

Disclosure of the identity of publishers was crucial for "regulating campaign financing and fixing of responsibility in case the content is found unbecoming of the framework of the Model Code of Conduct or the statutory provisions", the poll body said.

In a letter to the Chief Secretaries of all States and Union Territories, the EC directed them to ensure clear identification of printers and publishers on printed poll-related material, including hoardings, for accountability and transparency in campaign communications.

**The decision is to ensure accountability and transparency in campaign communications**

The decision was taken by the commission after it received representations stating that anonymous hoardings had been found in spaces controlled by municipal authorities.

Section 127A of the Representation of the People Act, 1951, prohibits the printing or publishing of election pamphlets, posters, placards, or banners without prominently displaying the name and address of the printer and publisher.

In the letter to the Chief Secretaries, the EC asked them to bring the poll body's instructions to the notice of all municipal or other authorities responsible for hoardings, posters, banners etc., "for strict compliance". The Chief Electoral Officers were also told to convey this to all political parties in their States for "strict compliance".

"With this directive, the commission now has put the accountability on printers, publishers, and licensees/contractors of urban local bodies renting out outdoor advertising space, for political advertisements published on outdoor media," it said.

THE HINDU
11 APR 2024

INBRIEF



B. JOTHI RAMALINGAM

## Setting up of EVMs for Lok Sabha election begins

The process of fixing candidates' names and their symbols on the ballot units of electronic voting machines (EVMs) to be used in Chennai district's three Parliamentary constituencies has begun. This work will continue for three days in the presence of officials and representatives of candidates. District Election Officer J. Radhakrishnan said 11,843 electronic voting machines (EVMs), 4,469 control devices, and 4,842 voter verified paper audit trail (VVPAT) units, including 20% from the reserve would be used for voting. "Voter information slips have been distributed to 16.7 lakh voters so far. Also, micro-inspectors and police personnel have been deputed to work in a total of 769 polling stations," Mr. Radhakrishnan added.

THE TIMES OF INDIA

11 APR 2024

# GCC centre for cops to cast postal votes

**Chennai:** Greater Chennai Corporation will be setting up facilitation centres for police personnel to cast postal ballots until April 13 for the 2024 general elections. The centres will function from 9 am to 5 pm.

The centre for North Chennai will be located at 62, Basin Bridge Road, Washermenpet. Cops voting in North Chennai, Vellore, Krishnagiri, Dharmapuri, Thiruvannamalai, Arani, Villupuram, Erode, Tirupur, and Perambalur can vote here.

The centre for South Chennai constituency will be located at 115, Muthulakshmi Salai, in Adyar. Personnel with votes in South Chennai, Mayiladuthurai, Nagapattinam, Thanjavur, Sivagangai, Madurai, Theni, Virudhunagar, Ramanathapuram, Tuticorin, Tenkasi, Tirunelveli, and Kanyakumari constituencies can vote here.

For Central Chennai, the office will be located at 36 B, 2nd Cross Street, Pulla Avenue, Shenoy Nagar. TNN

THE HINDU
11 APR 2024

# Election Commission deploys companies of paramilitary personnel in cities and districts

The Hindu Bureau
CHENNAI

Seven companies of paramilitary personnel have been deployed in Chennai by the Election Commission of India (EC) for the Lok Sabha election in the State.

Avadi and Tambaram have been given three companies each.

While seven companies have also been deployed in Madurai, Coimbatore city gets six, Tiruppur, three; Tiruchi and Salem four each; and Tirunelveli three.

**Districts' list**

Besides these cities, companies of paramilitary personnel have also been deployed in the following districts - Ariyalur (two); Chengalpattu (three); Coimbatore (seven); Cuddalore (five); Dharmapuri (four); Dindigul (four); Erode (four); Kallakurichi (three); Kancheepuram (five); Karur (three); Kanniyakumari (six); Krishnagiri (four); Madurai (four); Mayiladuthurai (two); Nagapattinam (two); Namakkal (three); Perambalur (three); Pudukkottai (three); Ramanathapuram (four); Ranipet (three); Salem (five); Sivaganga (four); Tenkasi (three); Thanjavur (six); Theni (six); the Nilgiris (two); Thoothukudi (six); Tiruchi (three); Tirupattur (four); Tiruppur (five); Tirunelveli (five); Tiruvallur (four); Tiruvannamalai (five); Tiruvarur (three); Vellore (five); Virudhunagar (five); and Villupuram (five).

As many as 190 companies have been deployed across Tamil Nadu for this election.

THE HINDU
11 APR 2024

# Railway employees lose right to cast postal votes in LS poll this time

**The Hindu Bureau**
CHENNAI

The railway employees in Tamil Nadu have lost their right to cast votes through postal ballots during this Lok Sabha election as Southern Railways requested for extending the facility of postal ballot to Chennai Collector instead of sending the communication to Chief Electoral Officer (CEO).

Appearing before Chief Justice Sanjay V. Gangapurwala and Justice J. Sathya Narayana Prasad, ECI counsel Niranjan Rajagopalan said, the CEO had written to various central government organisations on February 5 and wanted to know whether their employees should be given the postal ballot facility.

The letter was sent to the General Manager of Southern Railways too insisting upon a reply on or before February 10. Since there was no response, the CEO sent a reminder on February 16 asking Southern Railways and a few other entities to respond to his .communication on or before February 20. However, there was no response from the Southern Railway to the reminder too, the counsel said.

The submissions were made during the hearing of a public interest litigation petition filed by railway employee V. Ramkumar of Madurai.

However, after recording his submissions, the judges observed that Southern Railways could consider, on a case to case basis, the possibility of granting leave to the employees on April 19.

THE NEW INDIAN EXPRESS
11 APR 2024

# Work to affix candidates' names, symbols on EVMs begins

EXPRESS NEWS SERVICE
@Chennai

THE District Election Office (DEO) began registering the names and symbols of candidates in the electronic voting machines in Chennai on Wednesday. The process is likely to be completed in three days.

A total of 11,843 ballot units, 4,469 control units and 4,842 VVPAT machines were allotted through randomisation for the three parliamentary constituencies in Chennai. The Election Commission has also designated 20% reserve units for the three Lok Sabha seats.

The DEO inspected the EVM registration process at the Bharathi Women's College in George Town and the Chennai Women's Higher Secondary School in Tiruvanmiyur. Two EVM units were allotted for each polling booth in Central Chennai where 31 candidates are in the fray and three EVM units were allotted for each polling booth in Chennai North and South constituencies which have 35 and 41 candidates respectively. As many as 769 polling booths were identified in the city as requiring special attention and the DEO has appointed special micro observers and police observers for these booths. Among them, 611 booths were identified as vulnerable and 23 as critical. A total of 14,735 government staff and 19,122 police on poll duty have applied for postal voting in Chennai. Out of 4,538 postal ballots distributed for people over 85 and disabled persons, as many as 1,003 voters have cast their votes till Wednesday.



Adding candidates' names and party symbols to EVMs at Nandanam college | EXPRESS

**SEIZURE SO FAR**

**₹14.73** crore seized by Flying Squad Teams, Static Surveillance Teams

**₹19.92** crore by Income Tax department

**₹1** crore by the Excise Department

**₹59.33** lakh worth drugs & alcohol

## PANELS TO ENSURE FIRMS GIVE WORKERS PAID LEAVE TO VOTE

EXPRESS NEWS SERVICE @Chennai

THE Directorate of Industrial Safety and Health (DISH) in Chennai has constituted state and district-level committees to ensure compliance of the decision to observe paid holiday on the election day.

The state government had declared a public holiday on April 19 in view of the Lok Sabha elections in the state.

All Industries, shops, commercial establishments, factories, construction establishments and other public sector undertakings are obliged to declare a paid holiday on April 19. "Suitable action would be initiated against the managements if paid holiday is not granted on the poll day," the press release read. The DISH has appointed special officials and announced new helplines for reporting violation of government direction.

**Helplines to report violations**

State Control Room
9444221011

Chennai
6374160918

Chengalpattu
9025155455

Kancheepuram
8667222871

Tiruvallur
9952000256

THE NEW INDIAN EXPRESS
11 APR 2024

# No postal vote for railway staff in TN as deadline lapsed

EXPRESS NEWS SERVICE
@ Chennai

POINTING out that the deadline for government employees engaged in essential services to apply for postal ballots has lapsed, the Madras High Court on Wednesday refused to issue orders to the Election Commission of India (ECI) for enabling the Railways department staff to cast their vote through postal ballot.

The first bench of Chief Justice SV Gangapurwala and Justice J Sathya Narayana Prasad, while disposing of a petition filed by a Southern Railway officer in Madurai, Ramkumar, said, "In view of the timeline, it is not possible now to direct the ECI to print additional ballots and permit the petitioner to vote by postal ballots." It added that it would not be appropriate to issue any directions at eleventh hour.

However, recording the submission of the counsel for the Railways, court directed the department to consider granting leave to employees on a case-to-case basis so that they can cast their votes.

The counsel for ECI, Niranjan Rajagopalan, submitted that a notification on the postal ballots was issued under section 60 (c) of the Representation of the People Act, 1951 and the Railways was intimated on the notification of the essential services by February 10, and reminder was sent seeking response by February 20. But they had addressed the response to the Chennai district collector who has no role in the election. A representation was received only on April 2 by then the cut-off date, March 25, for the voters to apply for postal ballots has lapsed. "If the applications are not received by March 25, none can be permitted to vote, he said, adding that the ballot papers are printed depending on the number of applications received. Additional ballot papers cannot be printed at this juncture," he told the bench.

DT Next
11 APR 2024

# Candidate name setting in EVMs to be over in 3 days, says DEO



Officials set candidates name, symbol in the EVMs in front of political parties in Chennai on Wednesday

**CHENNAI: The process for setting names of candidates and symbols in ballot units in three constituencies of Chennai district has commenced on Wednesday. It would continue for the next three days, and once the candidate setting in ballot units had completed it would be sealed in a strong room with surveillance and security round the clock.**

Speaking to the reporters, district election officer and Greater Chennai Corporation Commissioner J Radhakrishnan said, "Ahead of the elections, preparatory measures have been taken as per the guidelines issued by the Election Commission. Of which, the candidate setting has started in the city at 16 places it will be monitored by ARO in the respective constituency."

The list of candidates approved by the EC has been set in the ballot boxes in front of the political parties under the surveillance of returning officers and election observers of the respective constituency. "If there is any query raised by the members of the political parties it would be resolved and then the setting will be processed. After the candidate setting is done, it will be sealed in the strong room. The candidate setting will be continued for the next three days in the three constituencies," added Radhakrishnan.

As many as 11,843 ballot units are required at the 16 Assembly constituencies, 4,469 control units and 4,842 VVPAT which are available for the upcoming election in Chennai district.

Meanwhile, the staff drafted for election duty has distributed 11.7 lakh voters' slips to the eligible voters in the city from April 1. As per model code of conduct, the local body has seized over Rs 14 crore worth cash, gold and other items and the income tax officers have seized Rs 19 crore worth products in the city so far.

DT Next

11 APR 2024

# Seizures in cash, valuables so far totals to Rs 304 crore, informs EC

**CHENNAI:** The Election Commission (EC) on Wednesday informed that it has seized cash and other items worth Rs 304 crore so far. According to the EC's official data, Total cash worth Rs 143.0591 crore, total liquor worth Rs 5.0173 crore, total narcotics worth Rs 0.9343 crore, total precious metal worth Rs 121.6509 crore and freebies etc worth Rs 32.9791 crore were seized till Wednesday, April 10 morning. "The cumulative seizures including income tax till Wednesday is Rs 303.6397 crore," a release from the EC read. Meanwhile, the EC has deployed 190 companies of Central Armed Police Forces (CAPF) across the state for the April 19 Lok Sabha polls. For Chennai city, 7 companies, for Avadi 3 companies, Tambaram 3 companies, Coimbatore 6 companies, Tirupur 3, Salem 4, Tiruchy 4, Madurai 7 and Tirunelveli 3 companies were deployed.


DT Next
11 APR 2024

# HC refuses postal ballot for railway staff as process is already on

**CHENNAI: The Madras High Court refused to allow the railway employees to cast their votes through postal ballots as the process has already commenced for the 2024 Parliament election.**

The first division bench comprising Chief Justice SV Gangapurwala and Justice J Sathya Narayana Prasad heard a plea seeking to include the railway employees to cast their votes through postal ballots.

**The standing counsel for the EC submitted that no response was received from the Southern Railway in this regard. Now the deadline to apply for postal ballots is also over**



The standing counsel for the Election Commission (EC) submitted that no response was received from the Southern Railway in this regard, now the deadline to apply for postal ballots is also over, it is not possible to print additional postal ballots as the process for postal ballots has already commenced, said the counsel. The counsel for the Southern Railway submitted that it will be considered granting holiday for the employees to enable them to cast their votes.

After the submission, the bench refused to direct the EC to print additional postal ballots as the process had already commenced and disposed of the petition.

Petitioner V Ram Kumar from Madurai moved the petition stating that the railway employees could not cast their votes, since they are posted in various locations and sought the HC to direct the EC to allow them to cast the postal ballots.

இந்து தமிழ் திசை

11 APR 2024

## தமிழகத்தில் ரூ.15.87 கோடி பறிமுதல்

# 3,221 தேர்தல் விதிமீறல் புகார்

● தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தகவல்

● சென்னை

தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகளை மீறியது தொடர்பாக சி விஜில் செயலி மூலம் 3,221 புகார்கள் பெறப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆங்காங்கே பணம், பொருட்கள் பறிமுதல் என்ற தகவல்கள் வந்தாலும், வருமான வரித்துறையினர் அவை தொடர்பாக விசாரணை நடத்திய பின், அரசியல் தொடர்பா இல்லையா என்பதை ஆய்வு செய்து அதன் பின்னர்தான் எங்களுக்கு தகவல் அளிப்பார்கள். இதுவரை, ரூ.15 கோடியே 86 லட்சத்து 91 ஆயிரம் மதிப்புள்ள ரொக்கம், தங்கம் உள்ளிட்டவை வருமான வரித்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்போது வரை தபால் வாக்குக்கான 12 படிவம் 1,07,186 வாக்குச்சாவடி அலுவலர்களும், 50,790 காவல்துறையினரும், 3,423 ஓட்டுநர் உட்பட என 1,59,084 பேர் அளித்துள்ளனர். அதே போல், பணியாற்றும் இடத்தில் மின்னணு இயந்திரத்தில் வாக்களிப்பதற்கான 12ஏ படிவத்தை இதுவரை 1,97,562 பேர் கொடுத்துள்ளனர்.

இதுதவிர, 82,666 மூத்த குடிமக்கள், 50,665 மாற்றுத்திறனாளிகள், அத்தியாவசிய பணிகளில் இருப்பவர்கள் 8 பேர் என மொத்தம் 1,33,339 பேரிடம் படிவம் பெறப்பட்டு, தபால் வாக்கு பெறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தபால் வாக்கு பெறுவதற்காக வீடுவீடாக அரசு அலுவலர், காவல்துறை அலுவலர், நுண் பார்வையாளர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் செல்கின்றனர்.

தற்போது வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர்கள், சின்னங்கள் ஒட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் செய்யப்படும்.

தேர்தல் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்படும் பட்சத்தில், அதில் தேர்தல் ஆணையத்தின் உத்தரவு இருந்தால், அவர் மீதான நடவடிக்கை குறித்து தேர்தல் ஆணையம் முடிவெடுத்து அறிவிக்கும். இல்லாவிட்டால், மாவட்ட தேர்தல் அதிகாரியே முடிவெடுப்பார்.

சிவிஜில் செயலி மூலம் தற்போது வரை 3,221 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 600 புகார்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றில் 23 புகார்கள் மீதான நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### பரந்தூர் மக்கள் புறக்கணிப்பு

புதிய விமானநிலையம் அமைய உள்ள பரந்தூர் உள்ளிட்ட கிராம மக்கள் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ள நிலையில், இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்டபோது, "பொதுவாக சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரியோ அல்லது பிரதிநிதியோ சம்பவ இடத்துக்கு சென்று அங்குள்ள மக்களை அழைத்து பேசி அறிவுரை வழங்குவார்கள். அதேநேரம் வாக்களிப்பது என்பது அவர்கள் உரிமை. ஜனநாயக நாட்டில் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது" என சாஹு தெரிவித்தார்.

CEO, TN. informs that E.C received 3221 MCC violation Complaints & Rs 15.87 crore were seized in overall Tamil Nadu.

இந்து தமிழ் திசை

11 APR 2024

# 'தேர்தல் விளம்பரங்களில், அச்சகம், வெளியீட்டாளரின் பெயர் கட்டாயம்'

18 வது மக்களவை தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் பத்திரிகைகள், சுவரொட்டி, துண்டு பிரசுரம், தட்டி விளம்பரம், தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் உள்ளிட்டவற்றில் பிரச்சார விளம்பரங்களைத் தீவிரமாக வெளியிட்டு வருகின்றன. இந்நிலையில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்குத் தேர்தல் ஆணையம் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேர்தல் நடத்தை விதிகளின்கீழ் அரசியல் கட்சிகள் வெளியிடும் தேர்தல் விளம்பரங்களை அச்சடிக்கும் நிறுவனங்களின் பெயர் அந்த விளம்பரங்களில் கட்டாயம் இடம்பெற வேண்டும். ஆனால், வெளியீட்டாளரின் பெயர் இல்லாமலேயே பல தேர்தல் விளம்பரங்கள் வெளிவருவதை காண முடிகிறது. தேர்தல் தொடர்பான துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், தட்டி விளம்பரங்களில் அச்சிடும் அச்சகத்தாரர்கள் மற்றும் வெளியீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி இடம் பெற வேண்டும். இவற்றைப் பூர்த்தி செய்தபின் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்து ஒப்புதல் சான்றிதழ் வாங்கிய பிறகுதான் தேர்தல் தொடர்பான விளம்பரத்தினை வெளியிட முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ECI instruct all Political parties to mention the press name on the poster, banners & Advertisements

இந்து தமிழ் திசை
11 APR 2024

சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில்

# வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்

● சென்னை

சென்னை மாவட்டத்தில் வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது.

மக்களவை தேர்தலில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி அந்தந்த தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று தொடங்கியது. துறைமுகம் தொகுதியில் பாரதி மகளிர் கல்லூரியில் இப்பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன் நேற்று நேரில் ஆய்வு செய்தார். தொடர்ந்து, வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட திருவான்மியூர் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பணிகளையும் ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னை மாவட்டத்தில் வாக்குப் பதிவுக்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே பார்வையாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், விவிபாட் இயந்திரங்கள் உள்ளிட்ட வாக்குப்பதிவுக்கு தேவையான இயந்திரங்கள் கணினி குலுக்கல் முறையில் வாக்குச் சாவடி வாரியாக தேர்வு செய்யப்பட்டு அந்தந்த சட்டப்பேரவை



↑ ஸ்ரீபெரும்புதூர் மக்களவை தொகுதியில், தாம்பரம் சட்டப்பேரவை தொகுதிக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஜெயகோபால் கரோடியா பள்ளியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது. படம்: எம்.முத்துகணேஷ்

தொகுதிகளில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து, வேட்பாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் துணை மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வட சென்னை மற்றும் தென் சென்னை மக்களவை தொகுதிகளில் 3 வாக்குப்பதிவு இயந்திரங்களும், மத்திய சென்னையில் 2 வாக்குப்பதிவு இயந்திரங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தும் பணி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று தொடங்கியது. இப்பணிகள் 3 நாட்களில் முடிக்கப்படும்.

வாக்குப்பதிவுக்கு 11,843 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4,469 கட்டுப்பாட்டுக் கருவிகள், 4,842 விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. வாக்காளர் தகவல் சீட்டுகள் இதுவரை 16.7 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் 611 பதற்றமான வாக்குச்சாவடிகள், 23 சவாலான வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், கூடுதல் பாதுகாப்பு தேவைப்படும், ஒரே இடத்தில் 10 வாக்குச்சாவடிகளுக்கு மேலுள்ள 135 வாக்குச் சாவடிகள் என மொத்தம் 769 வாக்குச்சாவடிகளில் பணிபுரிய நுண் பார்வையாளர்கள் மற்றும் காவல் துறை பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசு ஊழியர்களில், சென்னை, இதர மாவட்டத்தினர், புதுச்சேரி ஊழியர்கள் என 14,735 அரசு ஊழியர்களிடமிருந்தும், காவல் பணிகளில் 19,122 பேரிடமிருந்தும் தபால் வாக்குகளுக்கான படிவங்கள் பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க இயலாத 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கான 4,538 தபால் வாக்குகளில் இதுவரை 1003 பேர் வாக்களித்துள்ளனர்.

தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் மூலமாக இதுவரை ரூ.14.73 கோடி, வருமானவரித் துறை சார்பில் ரூ.19.92 கோடி, மதுபானம் மற்றும் போதை பொருள் உள்ளிட்ட ரூ.59.33 லட்சம் மதிப்பிலான பொருள்கள், கலால் துறை மூலமாக ரூ.1 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் கே.ஜெ.பிரவீன் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ச.சுரேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

~~Fitting of Name~~ Fitting of Candidates Name, Symbol in EVMs were started yesterday

இந்து தமிழ் திசை

11 APR 2024

# சென்னை, மதுரை, கோவைக்கு கூடுதல் துணை ராணுவம்

● சென்னை

சென்னை, மதுரை, கோவைக்கு கூடுதல் துணை ராணுவப் படையினர் நியமிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் பற்றாக்குறை காரணமாக தேர்தல் பணிக்காக வெளிமாநிலத்தில் இருந்து ஊர்க்காவல் படையினர் வரவழைக்கப்படுகின்றனர்.

தமிழகத்தின் 39 மக்களவை தொகுதிகளிலும் உள்ள 68,321 வாக்குச்சாவடிகளிலும் வரும் 19-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்குப்பதிவுக்கான மின்னணு இயந்திரங்கள் பிரிக்கப்பட்டு, அதில் வேட்பாளர்கள், சின்னம் ஒட்டும் பணி நடந்து வருகிறது. இதுதவிர தேர்தல் பணியாளர்கள், காவல் துறையினர், துணை ராணுவப் படையினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளனர்.

தமிழகத்துக்கு தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட 190 கம்பெனி துணை ராணுவப் படையினர் வந்து, பல்வேறு மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பதற்றமான, மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் இவர்கள் அதிக அளவில் பணியமர்த்தப்படுகின்றனர். அந்த வகையில், சென்னை, மதுரை, கோவை மாவட்டத்துக்கு தலா 7 கம்பெனிகளும், அடுத்ததாக தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூருக்கு தலா 6 கம்பெனிகளும், திருநெல்வேலி, விருதுநகர், திருப்பூர், சேலம் மாவட்டங்களுக்கு தலா 5 கம்பெனிகளும் பிரித்து அனுப்பப்பட உள்ளன.

இவர்கள் தவிர, தமிழக காவல் துறையின் அனைத்து படை பிரிவினர், ஊர்க்காவல்படையினர், முன்னாள் ராணுவத்தினரும் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இதில் ஊர்க்காவல் படையினர் போதிய அளவில் தமிழகத்தில் இல்லாத நிலையில், காவல்துறை மூலம், அண்டை மாநிலத்தில் இருந்து ஊர்க்காவல் படையினர் வரவழைக்கப்பட உள்ளதாகவும், அருகில் உள்ள மாநிலங்களுக்கு தேவைப்படும் படையினர் தமிழகத்தில் இருந்து அனுப்பப்படுவார்கள் என்றும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

Additional paramilitary forces for Chennai, Madurai & Coimbatore districts.

இந்து தமிழ் திசை

11 APR 2024

# போலீஸார் தபால் வாக்கு செலுத்த 3 இடங்களில் ஏற்பாடு

## இன்று முதல் 13-ம் தேதி வரை செலுத்தலாம்

● சென்னை

சென்னையில் போலீஸார் தபால் வாக்கு செலுத்த 3 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் இன்று முதல் 13-ம் தேதி வரை செலுத்தலாம்.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகர காவல் துறையில் பணியாற்றுபவர்களில் தபால் வாக்கு கேட்டு விண்ணப்பித்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் அனைவரும் இன்று முதல் 13-ம்தேதி வரை காலை 9 முதல் மாலை 5 மணி வரை தபால் வாக்குகளை செலுத்த சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 3 தேர்தல் நடத்தும் அலுவலர்களின் அலுவலகத்தில் சிறப்பு தபால் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை பேசின் பாலம் சாலை, மூலகொத்தளம் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சியின் வட சென்னை வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு தபால் வாக்குச்சாவடி மையத்தில் வட சென்னை, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, ஆரணி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், பெரம்பலூர் ஆகிய மக்களவை தொகுதிகளை சேர்ந்தவர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம்.

அடையார், முத்துலட்சுமி சாலையில் உள்ள தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில், தென் சென்னை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தொகுதிகளை சேர்ந்தவர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம்.

செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள மத்திய வட்டார துணை ஆணையர் அலுவகத்தில் மத்திய சென்னை, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம், நீலகிரி, கோவை, பொள்ளாச்சி, திண்டுக்கல், கரூர், திருச்சி, கடலூர், சிதம்பரம் மற்றும் புதுச்சேரி ஆகிய தொகுதிகளை சேர்ந்தவர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம்.

தகுதியுள்ள போலீஸார் வாக்குச்சாவடிகளுக்கு தகுந்த ஆவணங்கள் மற்றும் காவலர் அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Greater chennai corporation arranged polling centres for police Dept to cast their postal vote.

இந்து தமிழ் திசை

1 APR 2024

### வாக்குப்பதிவு நாளன்று தெற்கு ரயில்வே ஊழியர்கள்

# வாக்களிக்க விடுப்பு கோரினால் பரிசீலிக்க உத்தரவு

● சென்னை

மதுரை ரயில்வே கோட்டத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் ராம்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த மனுவில், “நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் ராணுவம், துணை ராணுவம் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள், உடல்நலன் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு தபால் வாக்கு செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதுபோல, தெற்கு ரயில்வேயில் பணிபுரியும் ரயில் ஓட்டுநர்கள், பயணச்சீட்டு பரிசோதகர்கள், ரயில்நிலைய அதிகாரிகளுக்கும் தபாலில் தங்களின் வாக்கை செலுத்த அனுமதியளிக்க தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்” எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஜெ.சத்ய நாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில், “ரயில்வே ஊழியர்களுக்கு தபால் வாக்குப்பதிவுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக தெற்கு ரயில்வே நிர்வாகத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் பிப்.20-ம் தேதிக்குள் தெற்கு ரயில்வே நிர்வாகம் இதற்காக விண்ணப்பிக்கவில்லை. அதுபோல சம்பந்தப்பட்ட வாக்காளர்களும் தபால் வாக்குரிமை கோரி கடந்த மார்ச் 25-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கவில்லை. தற்போது தபால் வாக்குப்பதிவு தொடங்கிவிட்டதால் இனிமேல் கூடுதலாக தபால் வாக்குச்சீட்டுகளை அச்சடிக்க முடியாது. எனவே தற்போதைய சூழலில் ரயில்வே ஊழியர்கள் தபால் வாக்குரிமை கோர முடியாது” என வாதிடப்பட்டது.

அப்போது தெற்கு ரயில்வே நிர்வாகம் தரப்பில், “ரயில்வே ஊழியர்கள் நேரில் வாக்களிக்க ஏதுவாக விடுப்பு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்” என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், “கடைசி நேரத்தில் கூடுதலாக தபால் வாக்குச்சீட்டுகளை அச்சடித்து வழங்க வேண்டுமென தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது. ஆனால் ரயில்வே ஊழியர்கள் நேரில் வாக்களிக்க விரும்பினால் அவர்களுக்கு விடுப்பு வழங்குவது குறித்து தெற்கு ரயில்வே நிர்வாகம் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்” என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

No postal vote for railways staff in Tamilnadu if the employees request leave to vote will be consider. by Chennai High court.

தினத்தந்தி

11 APR 2024

தமிழகத்தில் தேர்தல் பாதுகாப்பிற்காக

# மாவட்ட வாரியாக துணை ராணுவ வீரர்களுக்கு பணி

## தேர்தல் கமிஷன் தகவல்

சென்னை, ஏப்.11-

தமிழகத்தில் தேர்தல் பாதுகாப்புக்காக மாவட்ட வாரியாக மொத்தம் 190 துணை ராணுவப் படையை இந்திய தேர்தல் கமிஷன் நியமித்துள்ளது. இதுகுறித்து தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வெளியிட்ட தகவல் வருமாறு:-

நகரங்களைப் பொறுத்த அளவில் சென்னை மற்றும் மதுரையில் தலா 7 கம்பெனி (ஒரு கம்பெனியில் 190 வீரர்கள்) துணை ராணுவப் படையினர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆவடி, தாம்பரம், திருப்பூர், நெல்லை ஆகிய நகரங்களில் தலா 3 கம்பெனி; கோவையில் 6; சேலம், திருச்சியில் தலா 4 கம்பெனி துணை ராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டங்களை பொறுத்த அளவில், கோவையில் 7 கம்பெனி; தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா 6 கம்பெனி;

காஞ்சீபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், சேலம், திருப்பூர், விருதுநகர், நெல்லை ஆகிய மாவட்டங்களில் தலா 5 கம்பெனி;

திருவள்ளூர், திருப்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் தலா 4 கம்பெனி;

செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாமக்கல், தென்காசி மாவட்டங்களில் தலா 3 கம்பெனி; அரியலூர், நாகை, மயிலாடுதுறை, நீலகிரி மாவட்டங்களில் தலா 2 கம்பெனி துணை ராணுவம் வீரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

190 paramilitary Companies were deployed for elections 2024.

இந்து தமிழ் திசை

11 APR 2024

## தேர்தல் விதி மீறல்: ஓபிஎஸ் மீது வழக்கு

● விருதுநகர்

ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஓ.பன்னீர்செல்வம், நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மேல் திருச்சுழி அருகே உள்ள கே.வாகைக்குளம் சென்றுள்ளார். அங்கு இரவு 11.15 மணியளவில் அவரும், ஆதரவாளர்களும் அங்கிருந்த பொதுமக்களிடம் வாக்கு சேகரித்ததாகப் புகார் எழுந்தது. இதுதொடர்பாக திருச்சுழி தேர்தல் பறக்கும் படை அலுவலர் ராஜ்குமார், பரளச்சி காவல் நிலையத்தில் நேற்று புகார் அளித்தார். அதன் பேரில், ஓ.பன்னீர்செல்வம், அங்கயற்கண்ணி மற்றும் சிலர் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

Case registered against O. Panneerselvam on MCC Violation, for Campaigning Overtime.

இந்து தமிழ் திசை
1 APR 2024

### சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம் பகுதிகளில்

# திமுக, அதிமுக, பாமக நிர்வாகிகளின் வீடுகளில் வருமான வரி துறை சோதனை

● கடலூர்/புதுச்சேரி

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உசுப்பூர் ஊராட்சியில் ராஜேந்திரன் கார்டன் பகுதியில் (அண்ணாமலை நகர் பகுதி) குமராட்சி கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் சங்கர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் திருமாவளவனுக்காக, தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் நேற்று மாலை தேர்தல் பறக்கும் படை அலுவலர் சரவணன் தலைமையிலான காவல் துறையினர் சங்கரிடம் வந்து, "உங்கள் காரில் பணம் இருப்பு வைத்துக் கொண்டு, வாக்காளர்களுக்கு விநியோகப்பதாக தகவல் வந்துள்ளது. எனவே, உங்களது காரை சோதனையிட வேண்டும்" என்று கூறி, காரில் சோதனை மேற்கொண்டனர். எனினும், சோதனையில் பணம் எதுவும் சிக்கவில்லை.

பின்னர் திமுக ஒன்றியச் செயலாளர் சங்கரின் வீட்டில் ரூ.6 கோடி பணம் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளது என்று தெரிவித்து, கடலூர் மண்டல வருமான வரித் துறை உதவி இயக்குநர் பாலமுருகன் தலைமையிலான 5 அதிகாரிகள் சங்கர் வீட்டுக்குச் சென்று, சோதனை மேற்கொண்டனர். எனினும், இந்த சோதனையில் பணம் எதுவும் கிடைக்காததால், அங்கிருந்து திரும்பிச் சென்றனர். இந்நிலையில், வருமான வரித் துறை சோதனை குறித்து அறித்த திமுகவினர் 200-க்கும் மேற்பட்டோர், சங்கர் வீட்டின் முன் குவிந்தனர்.

இதேபோல, ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் வசிக்கும் தொமுச நிர்வாகி தங்க ஆனந்தன் என்பவர் வீடு, அதிமுக ஜெயலலிதா பேரவை நிர்வாகி கானூர் பாலசுந்தரம் என்பவர் வீடு ஆகிய இடங்களிலும் சோதனை நடைபெற்றது.

இதில், கானூர் பாலசுந்தரம் வீட்டில் ரூ.12 லட்சம் இருந்ததாகவும், அதற்கு சரியான கணக்கு இருந்ததால் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, 2 நாள் கழித்து அவரை கடலூர் வருமான வரி துறை அலுவலகத்துக்கு கணக்குகளுடன் வருமாறு கூறிவிட்டு, அதிகாரிகள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். தங்க ஆனந்தன் வீட்டில் எதுவும் சிக்கவில்லை.

மேலும், விருதாச்சலத்தில் பாமக நிர்வாகி சரவணன் என்பவர் வீட்டிலும் சோதனை நடைபெற்றது.

**புதுச்சேரியில்...**

இதற்கிடையில், புதுச்சேரி பாஜக வேட்பாளர் நமச்சிவாயத்தின் ஆதரவாளர்கள் வீடுகளிலும் நேற்று இரவு சோதனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அந்த சோதனையில் எவ்வளவு கைப்பற்றப்பட்டது என்பது குறித்த தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை.

IT Dept. Raid at ADMK, DMK, BJP parties houses at cuddalore.

தினத்தந்தி
11 APR 2024

அரசியல் கட்சிகள் வைக்கும்

# பேனர்களில் அச்சகத்தின் பெயர் இடம்பெற வேண்டும்

## தேர்தல் கமிஷன் உத்தரவு

புதுடெல்லி, ஏப்.11-
அரசியல் கட்சிகள் வைக்கும் பேனர்களில் அவற்றை அச்சிட்ட அச்சகம் மற்றும் வெளியீட்டாளரின் பெயர் இடம் பெற வேண்டும் என்று தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

### புகார்

நாடாளுமன்ற தேர்தலுக்காக அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் விளம்பர பலகைகள், பேனர்கள், சுவரொட்டிகள், பதாகைகள் மூலம் விளம்பரம் செய்து வருகிறார்கள்.

ஆனால் இந்த விளம்பர பொருட்களில் அவற்றை அச்சிட்ட அச்சகத்தின் பெயரோ, வெளியீட்டாளரின் பெயரோ இடம்பெறுவதில்லை என்று புகார்கள் எழுந்தன. ஆம் ஆத்மி கட்சி சார்பில் தேர்தல் கமிஷனிடம் இதுதொடர்பாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி தேர்தல் கமிஷன் ஆலோசனை நடத்தியது. அதன் அடிப்படையில், தேர்தல் கமிஷன் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

### தேர்தல் செலவுகள்

விளம்பர பலகைகள், பேனர்கள், சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான பொருட்களை அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் பெயர் இல்லாமல் வெளியிட மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 127ஏ பிரிவு தடை விதிக்கிறது. ஆகவே, அந்த விவரங்கள் இடம்பெற வேண்டும்.

அப்போதுதான் தேர்தல் பிரசாரத்தில் வெளிப்படைத்தன்மையை உருவாக்க முடியும். தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்த முடியும். பேனரில் உள்ள கருத்துகள், தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு எதிராக இருந்தால், அதற்கான பொறுப்பை சுமத்த முடியும்.

### தடை


அரசியல் விளம்பரங்கள் தொடர்பாக சமீபத்தில் டெல்லி மாநகராட்சி உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. ஒரு வேட்பாளர் அல்லது கட்சிக்கு ஆதரவாக விளம்பரம் வெளியிடலாம். ஆனால் பிற வேட்பாளருக்கு எதிராக விளம்பரம் வெளியிட தடை உள்ளது.

விளம்பரங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெற்றவரின் ஒப்புதலுக்கு பிறகே விளம்பரங்கள் வெளியிடப்பட வேண்டும். அரசு செலவில், ஆட்சியில் உள்ள கட்சிக்கு ஆதரவான விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

News regarding press name in the poster

தினத்தந்தி
11 APR 2024



மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னங்கள் பொருத்தும் பணி நேற்று பிராட்வேயில் உள்ள பாரதி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதனை மாவட்ட தேர்தல் அதிகாரி ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது எடுத்த படம்.

### வாக்குப்பதிவு எந்திரத்தில்

# வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி தீவிரம்

சென்னை, ஏப்.11-

சென்னை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்காக வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

## பெயர் மற்றும் சின்னம்

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, அனைத்து முன்னேற்பாட்டு பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்தநிலையில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது.

அப்போது, தேசிய கட்சிகள், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், பதிவுசெய்யப்பட்ட கட்சிகள், சுயேச்சை வேட்பாளர் என்பதன் அடிப்படையில் வரிசையாக பதிவு செய்யப்படுகிறது. அப்போது, கட்சியினர் ஏதேனும் சந்தேகங்கள் எழுப்பினால், அவர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு கொடுத்த பின்னர் மட்டுமே அடுத்த பணி நடைபெறும். இதையடுத்து, வாக்குப்பதிவு எந்திரத்தில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தப்பட்ட பின், அந்த வாக்குப்பதிவு எந்திரத்தில் 5 சதவீதம் வாக்குகள் வாக்கு பதிவு செய்து அனைத்து கட்சி பிரதிநிதிகளுக்கும் காண்பிக்கப்பட்டது.

## ராதாகிருஷ்ணன் ஆய்வு

சென்னை துறைமுகம், பாரதி மகளிர் கல்லூரி மற்றும் திருவான்மியூர் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி கமிஷனருமான டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், ராதாகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

வாக்குப்பதிவிற்காக சென்னைக்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளிலும் 11 ஆயிரத்து 843 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் ஏதேனும் எந்திரங்கள் கோளாறு ஆகும் பட்சத்தில் அதற்கு மாற்று எந்திரமாக தொகுதிக்கு 20 சதவீதம் எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளது. இந்த அனைத்து எந்திரங்களிலும் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணியானது 3 நாட்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தபால் வாக்கு

இதுவரையில் சென்னையில் 16.7 லட்சம் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தபால் வாக்களிக்க இதுவரையில், சென்னை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 965 பேரும், இதர மாவட்டங்களில் 6 ஆயிரத்து 760 பேரும், புதுச்சேரியில் 10 பேரும் என 14 ஆயிரத்து 735 வாக்குச்சாவடி அலுவலர்களும், சென்னை மாவட்டத்தில் 4 ஆயிரத்து 538 பேரும், இதர மாவட்டங்களில் 14 ஆயிரத்து 533 பேரும், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் 51 பேரும் என 19 ஆயிரத்து 122 போலீசாரும் தபால் வாக்குகளுக்கான படிவங்கள் பெறப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேபோல, தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் மூலமாக ரூ.14.73 கோடியும், வருமான வரித்துறை மூலமாக ரூ.19.92 கோடியும், மதுபானம் மற்றும் போதை பொருள் உள்ளிட்டவை ரூ.59.33 லட்சம் மதிப்பிலும், கலால்துறை மூலமாக ஒரு கோடி ரூபாயும் இதுவரையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

News regarding fitting candidates name in EVMs

தினத்தந்தி

11 APR 2024

சென்னையில்

# பிரதமர் மோடி வாகன பேரணியில் தேர்தல் விதிமீறல்

## 2 போலீஸ் நிலையங்களில் வழக்குப்பதிவு

சென்னை, ஏப்.11-
சென்னையில் பிரதமர் மோடி பங்கேற்ற வாகன பேரணியில் விதிமீறல் நடந்துள்ளதாக 2 போலீஸ் நிலையங்களில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

### வாகன பேரணி

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டுக்கு வருகை தந்து பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் நேற்று முன்தினம் தமிழகம் வந்த பிரதமர் மோடி தென் சென்னை, வடசென்னை, மத்திய சென்னை பா.ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து, சென்னை பனகல் பூங்காவில் இருந்து தேனாம்பேட்டை சிக்னல் வரையில் நடந்த வாகன பேரணியில் பங்கேற்றார்.

அப்போது அங்கு கூடியிருந்த பா.ஜனதா தொண்டர்களையும், மக்களையும் பார்த்து கை அசைத்தார். அவருக்கு மக்கள் பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். இந்த பேரணியில் பெரிய அளவிலான பேனர்கள், பதாகைகள் வைக்கப்பட்டு இருந்ததாகவும், அவற்றை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் அகற்றியதாகவும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜனதா நிர்வாகிகள், தொண்டர்கள் வாக்குவாதத்திலும் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

### வழக்குப்பதிவு

இந்த நிலையில் இந்த வாகன பேரணியில் தேர்தல் நடத்தை விதிகள் மீறப்பட்டதாக தேர்தல் பறக்கும் படை அதிகாரி, மாம்பலம் மற்றும் பாண்டி பஜார் போலீஸ் நிலையங்களில் புகார் அளித்ததாகவும், அதன் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Case registered in 2 police stations regarding MCC violation in the vehicle rally which Modi's participated.

தினத்தந்தி

11 APR 2024

வாக்குப்பதிவு எந்திரத்தில் ஒட்டப்படும்

# நாம் தமிழர் கட்சிக்கான 'மைக்' சின்னத்தில் குழப்பம்

## தேர்தல் கமிஷனிடம் புகார்

சென்னை, ஏப்.11-

சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரியிடம் நாம் தமிழர் கட்சி சார்பில் அளிக்கப்பட்ட மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

வரும் 19-ந் தேதி நடக்க இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு மைக் சின்னத்தை இந்திய தேர்தல் கமிஷன் ஒதுக்கியுள்ளது. கடந்த ஆண்டு மே 15-ந் தேதியில் உள்ள சின்னங்களின் பொதுப்பட்டியலில் இருந்து அந்த சின்னம் எங்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அந்த சின்னத்தைத்தான் மக்களிடம் பரவலாக கொண்டு சேர்த்துள்ளோம். ஆனால், கடந்த மார்ச் 25-ந் தேதி மேம்படுத்தப்பட்ட சின்னங்கள் பட்டியலில் அந்த மைக் சின்னத்தின் வடிவம் வித்தியாசமாக காணப்படுகிறது. மேலும், இந்திய தேர்தல் கமிஷன் அளித்த மைக்கில் 'ஆன் - ஆப் பட்டன்' காணப்படவில்லை. ஆனால் தற்போதைய பட்டியலில் உள்ள மைக் சின்னத்தில் அந்த பட்டன் உள்ளது. இது வாக்காளர்களுக்கு இடையே குழப்பத்தை ஏற்படுத்தும். எனவே இந்த தேர்தலில் வாக்குப்பதிவு எந்திரத்தில் ஒட்டப்பட உள்ள சீட்டில் நாம் தமிழர் கட்சிக்கு இந்திய தேர்தல் கமிஷன் ஒதுக்கிய மைக் சின்னத்தின் படத்தை பொருத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் வக்கில் பிரிவு மாநில செயலாளர் சங்கர் அளித்த பேட்டி வருமாறு:-

நாம் தமிழர் கட்சிக்கு இந்திய தேர்தல் கமிஷன் ஒதுக்கிய மைக் சின்னத்துக்கு பதில் வேறு வடிவில் உள்ள ஒரு மைக் சின்னம், வாக்குப்பதிவு எந்திரத்தில் பொருத்தப்பட்டு வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பட்டன் இல்லாத மைக் சின்னத்தையே அதில் பொருத்த வேண்டும். சின்னம் மாறுவதால், அது நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கியைப் பாதிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

N.T.K party Complaints CEO, TN for different symbol of Mic is used in EVMs rather then ECI's mic symbol.

தினத்தந்தி

11 APR 2024

பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக

# தேர்தலை புறக்கணிப்பதாக கூறும் மக்களிடம் பேச்சுவார்த்தை

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, ஏப்.11-

பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்துள்ள பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறியுள்ளார்.

இதுகுறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு நேற்று சத்யபிரத சாகு அளித்த பேட்டி வருமாறு:-

### பணம் பறிமுதல்

தாம்பரத்தில் நெல்லை ரெயிலில் பறக்கும் படை நடத்திய சோதனையில் ரூ.4 கோடி பறிமுதல் செய்யப்பட்டது.

அதுபற்றிய விசாரணை, வருமான வரித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தகவல்கள் மட்டுமே என்னிடம் கூறப்பட்டது. வருமான வரித்துறையும், தேர்தல் செலவின பார்வையாளரும் சேர்ந்து சிறப்பு விசாரணை நடைபெற்று வருகிறது. அதுபற்றிய தகவல்களை அவர்கள் இந்திய தேர்தல் கமிஷனிடம் நேரடியாக தெரிவிப்பார்கள்.

### தேர்தல் புறக்கணிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் (பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக) ஒரு பகுதியில் உள்ள சிலர் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்து உள்ளனர். அவர்களிடம் மாவட்ட தேர்தல் அதிகாரி நேரடியாக சென்று பேச்சுவார்த்தை நடத்துவார். வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துச் சொல்லி, அவர்களை கண்டிப்பாக வாக்களிக்க வலியுறுத்தப்படும். பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடிந்தால் அதையும் செய்வார்கள். பேச்சுவார்த்தையையும் மீறி தேர்தலை புறக்கணித்தால், ஜனநாயக நாடு என்பதால் நாங்கள் எதுவும் செய்ய முடியாது.

'சுகி, சுமோட்டா' மற்றும் பல இணையதளங்களிலும் தேர்தல் கமிஷனின் அனுமதி பெற்று விளம்பரம் செய்யலாம். அனுமதி பெறாமல் விளம்பரம் செய்தால் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

### பணப்பட்டுவாடா

தேர்தல் நெருங்க நெருங்க வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்ய வாய்ப்புள்ளதாக பல்வேறு தரப்பினர் கூறி வருகிறார்கள். இதையொட்டி தமிழகத்திற்காக நியமிக்கப்பட்ட தேர்தல் செலவின சிறப்பு பார்வையாளர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நேரில் சென்று, அங்குள்ள மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்களுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்.

தேர்தல் கமிஷன் அறிவுறுத்தியபடி நடக்காமல் பணியில் மெத்தனமாக இருக்கும் பறக்கும் படை அதிகாரிகள் சிலர் மீது இடைக்கால பணி நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தேர்தல் முடிந்த பிறகு பணியில் தொடருவது குறித்து, இந்திய தேர்தல் கமிஷன் அல்லது மாவட்ட தேர்தல் அதிகாரி முடிவு எடுப்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

CEO, TN. informs to talk with people who says boycott election regarding Parantur Airport issue.

தினத்தந்தி

11 APR 2024

பறக்கும் படை சோதனையில்

# கூடுதலாக இருந்த 50 ரூபாயால் அதிகாரிகளிடம் பணத்தை பறிகொடுத்த வாலிபர்

திரு.வி.க.நகர், ஏப்.11- நாடாளுமன்ற தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் கொடுக்கப்படுவதை தடுக்க தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்லும் நகை, பணம் உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் பெரம்பூர் அடுத்த பேப்பர் மில்ஸ் சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்ட பறக்கும் படையினர், அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த பெரம்பூரை சேர்ந்த முகமது அப்சல் (வயது 21) என்பவரை நிறுத்தி சோதனை செய்தனர். அவரிடம் ரூ.50 ஆயிரத்து 50 பணம் இருந்தது. திருமண நிகழ்ச்சிகளுக்கு அலங்கார வேலை செய்யும் அவர், குடோன் வாடகை செலுத்த அந்த பணத்தை எடுத்து செல்வதாக கூறினார். ஆனால் உரிய ஆவணங்கள் இல்லாததால் கூடுதலாக இருந்த 50 ரூபாயால் அந்த பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

இதேபோல் கொடுங்கையூர் எழில்நகர் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள், அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் உரிய ஆவணங்கள் இன்றி பழைய வண்ணாரப்பேட்டை போஜராஜன் நகரைச் சேர்ந்த ஜாபர் ஷெரிப் என்பவர் கொண்டு சென்ற ரூ.95 ஆயிரத்து 250 பணத்தை பறிமுதல் செய்தனர்.

Rs.50 Thousand were seized ~~from~~ by Flying Squad

தினத்தந்தி

01 APR 2024

# தபால் ஓட்டு



மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோரிடம் நாடாளுமன்ற தேர்தலுக்கான தபால் வாக்குகளை சேகரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி, வீட்டில் இருந்தபடியே நடிகர் எஸ்.வி.சேகரின் தாயார் அலமேலு வெங்கடராமன் (வயது 92) தபால் ஓட்டு போட்டபோது எடுத்த படம்

News regarding collection of Postal Vote from 85+ & PWDs.

தினத்தந்தி
11 APR 2024

# ரூ.200 கோடி ஹவாலா பணத்தை தேர்தலில் செலவு செய்ய திட்டம்

## விமான நிலையத்தில் பிடிபட்டவரால் அம்பலம்

*மீனம்பாக்கம், ஏப்.11-*
வெளிநாட்டில் இருந்து ரூ.200 கோடி ஹவாலா பணத்தை கொண்டு வந்து தேர்தலில் செலவிட திட்டமிட்டது, மலேசிய விமான நிலையத்தில் பிடிபட்டவரால் வெளிச்சத்துக்கு வந்தது.

### திருப்பி அனுப்பினர்

சென்னையை அடுத்த நீலாங்கரையைச் சேர்ந்தவர் வினோத்குமார் ஜோசப். இவர், கடந்த சில தினங்களுக்கு முன்பு சென்னையில் இருந்து மலேசியா வழியாக துபாய் நாட்டுக்கு சுற்றுலா பயணியாக புறப்பட்டு சென்றார்.

மலேசியாவில் அவரை குடியுரிமை அதிகாரிகள் சந்தேகத்தின்பேரில் பிடித்து விசாரித்தனர். அதில் அவர் சட்டவிரோத பணப்பரிவர்த்தனைக்காக இந்தியாவில் இருந்து புறப்பட்டு வந்துள்ளார் என்பது தெரிய வந்தது. இதையடுத்து மலேசியாவில் இருந்து வினோத்குமார் ஜோசப்பை கடந்த 7-ந்தேதி சென்னைக்கு திருப்பி அனுப்பிய அந்நாட்டு குடியுரிமை அதிகாரிகள், இது குறித்து சென்னையில் உள்ள வருமான வரித்துறை அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்தனர்.

### வருமான வரித்துறை விசாரணை

இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் தயாராக இருந்த வருமான வரித்துறை அதிகாரிகள், விமானத்தில் சென்னை வந்திறங்கிய வினோத்குமார் ஜோசப்பை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். அவரது செல்போன், லேப்டாப் போன்றவைகளையும் ஆய்வு செய்தனர்.

அதில் வினோத் குமார் ஜோசப், துபாயில் உள்ள செல்வம் என்பவரிடம் தொடர்ந்து பேசி வந்துள்ளார் என்பதும், வைர வியாபாரத்தில் தொடர்புடைய மோனிகா என்றபெண்ணிடமும் அவர் தொடர்பு கொண்டு பேசி உள்ளார். 'வாட்ஸ்அப்' உரையாடலும் இருந்ததாக தெரிகிறது. பின்னர் அவரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை தலைமை அலுவலகத்துக்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

### ரூ.200 கோடி ஹவாலா பணம்

அப்போது வினோத்குமார் ஜோசப், அப்பு என்ற ஒருவருடன் தொடர்பில் இருப்பதும் தெரிய வந்தது. அவர், சில அரசியல் கட்சிகளுடன் தொடர்புடையவர் என்றும், நாடாளுமன்ற தேர்தல் செலவினங்களுக்காக துபாய், மலேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்து ஹவாலா பணம் பரிவர்த்தனை மூலம் ரூ.200 கோடியை இந்தியாவுக்கு கொண்டு வரும் திட்டத்துடன் வினோத் குமார் ஜோசப் செயல்பட்டதும் தெரிய வந்தது.

தமிழ்நாட்டில் உள்ள ஒரு சில அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு அப்பு நெருக்கமாக இருப்பவர் என்றும் தெரிய வருகிறது. எனவே ஹவாலா பணத்தை தேர்தலில் செலவிட திட்டமிட்டு, அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு ஹவாலா பணம் பரிமாற்றம் நடக்க இருந்ததா? என்பது பற்றியும் விசாரணை நடக்கிறது.

### அமலாக்கத்துறையிடம் ஒப்படைப்பு

இதையடுத்து வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று மாலை, வினோத்குமார் ஜோசப்பை, மேல் விசாரணைக்காக சென்னையில் உள்ள அமலாக்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அமலாக்கத்துறை அதிகாரிகள், வினோத்குமார் ஜோசப்பிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த விசாரணையின் முடிவில்தான் முழு தகவல்கள் வெளிவரும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் இப்போதைக்கு வினோத்குமார் ஜோசப் மூலமாக வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு வர திட்டமிட்ட ஹவாலா பணம் ரூ.200 கோடி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் இதுபோல வேறு வழியில் இந்தியாவுக்கு ஹவாலா பணம் கடத்தி வரப்படுகிறதா? என்பது பற்றியும் தீவிரமாக விசாரணை நடத்தி வருவதாக வருமான வரித்துறை தரப்பில் கூறப்படுகிறது.

A person caught at airport with hawala says that plan to spend 200 crore Rs hawala money on elections.

தினத்தந்தி

11 APR 2024

தேர்தல் சோதனை:

# ரூ.303 கோடி ரொக்கம், தங்கம் பறிமுதல்

சென்னை, ஏப்.11-

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, பறக்கும் படை சோதனையில் தமிழகத்தில் இதுவரை ரூ.303 கோடியே 63 லட்சம் மதிப்புள்ள பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன.

அதில் ரொக்கமாக ரூ.143 கோடியே 5 லட்சத்து 91 ஆயிரமும், கைப்பற்றப்பட்ட மதுபான வகைகளின் மதிப்பு ரூ.5 கோடியே ஒரு லட்சத்து 73 ஆயிரமும், போதைப் பொருட்களின் மதிப்பு ரூ.93 லட்சத்து 43 ஆயிரமும், தங்கம் உள்ளிட்ட விலையுயர்ந்த ஆபரணங்களின் மதிப்பு ரூ.121 கோடியே 65 லட்சத்து 9 ஆயிரமும், இலவச பரிசுப் பொருட்களின் மதிப்பு ரூ.32 கோடியே 97 லட்சத்து 81 ஆயிரமும் அடங்கும்.

இந்த தகவலை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வெளியிட்டுள்ளார்.

As of Now 303 crore were seized by flying squad at Tamilnadu.

தினத்தந்தி

11 APR 2024

தெற்கு ரெயில்வே ஊழியர்கள்

# தபால் ஓட்டு போட அனுமதிக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது

## ஐகோர்ட்டு தீர்ப்பு

சென்னை, ஏப்.11-
கடைசி நேரத்தில் தெற்கு ரெயில்வே ஊழியர்களுக்கு தபால் ஓட்டு சீட்டுகளை அச்சடித்து வழங்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது என்று சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது.

### தபால் ஓட்டு

நாடாளுமன்ற தேர்தலில் ராணுவம், துணை ராணுவப் படை வீரர்கள், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் அரசு ஊழியர்கள், உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் வாக்களிக்க ஏதுவாக தபால் மூலம் ஓட்டு போட அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த பட்டியலில் தெற்கு ரெயில்வே ஊழியர்களையும் சேர்க்கும்படி இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில், தெற்கு ரெயில்வேயின் மதுரை கோட்ட கண்காணிப்பாளராக பணியாற்றும் ராம்குமார் என்பவர் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, தெற்கு ரெயில்வே ஊழியர்களை தபால் ஓட்டு செலுத்த அனுமதிக்க முடியுமா? என்று பதில் அளிக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

### உரிமை இல்லை

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா, நீதிபதி ஜெ.சத்திய நாராயண பிரசாத் ஆகியோர் கொண்ட முதல் பெஞ்சில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில், 'தபால் ஓட்டுப்பதிவுக்கு அ்னுமதி கேட்டு விண்ணப்பம் அனுப்பும்படி, தெற்கு ரெயில்வே நிர்வாகத்துக்கு கடிதம் அனுப்பியும், கடைசி நாளான பிப்ரவரி 20-ந் தேதிக்குள் விண்ணப்பிக்கவில்லை. தபால் ஓட்டுப்பதிவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட வாக்காளர்கள் மார்ச் 25-ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தற்போது தபால் ஓட்டு சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு, வாக்குப்பதிவு நடந்து வருகிறது. அதனால், தபால் வாக்க்ளிக்க தெற்கு ரெயில்வே ஊழியர்கள் உரிமை கோர முடியாது'' என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

### விடுப்பு

தெற்கு ரெயில்வே தரப்பில், 'நேரில் வாக்களிக்க ஏதுவாக ஊழியர்களுக்கு விடுப்பு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்' என்று கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், 'கடைசி நேரத்தில் கூடுதல் தபால் ஓட்டு சீட்டுகளை அச்சடித்து, தெற்கு ரெயில்வே ஊழியர்களுக்கு வழங்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது. இந்த வழக்கை முடித்து வைக்கிறோம். ஊழியர்கள் நேரில் வாக்களிக்க ஏதுவாக விடுப்பு வழங்குவது குறித்து தெற்கு ரெயில்வே நிர்வாகம் பரிசீலிக்க வேண்டும்" என்று தீர்ப்பு அளித்தனர்.

News regarding No postal vote for railways Staff in Tamil Nadu

தினத்தந்தி

11 APR 2024

வாக்குச்சாவடிகளில் வரிசையில் நிற்கும்

# வாக்காளர்களிடம் மதுபோதை பரிசோதனை நடத்தக்கோரி வழக்கு

## சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி

புதுடெல்லி, ஏப்.11-

வாக்குச்சாவடிகளில் வரிசையில் நிற்கும் வாக்காளர்கள் மது அருந்தி இருக்கிறார்களா என்பதை கண்டறியும் பரிசோதனை நடத்த உத்தரவிடக்கோரிய மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தது.

### ஐகோர்ட்டில் தள்ளுபடி

ஜனவாஹினி கட்சியின் ஆந்திர மாநில பிரிவு, தேர்தல்களில் வாக்குச்சாவடிகளில் வாக்களிக்க வரிசையில் நிற்கும் வாக்காளர்கள் மது அருந்தி இருக்கிறார்களா என்பதை கண்டறியும் பரிசோதனை நடத்தக்கோரி தேர்தல் கமிஷனிடம் மனு அளித்தது. ஆனால் அதற்கு தேர்தல் கமிஷன் பதில் அளிக்கவில்லை.

இதையடுத்து, ஆந்திர ஐகோர்ட்டில் அக்கட்சி வழக்கு தொடர்ந்தது. ஆனால், இதை தேர்தல் கமிஷன் கட்டாயமாக பின்பற்றுவதற்கான சட்டப்பிரிவு எதையும் மனுதாரர் சுட்டிக் காட்டவில்லை என்று கூறி, அவ்வழக்கை கடந்த பிப்ரவரி 28-ந்தேதி ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது.

### கருவியை வைக்க வேண்டும்

அதன்பின், ஜனவாஹினி கட்சியின் ஆந்திர மாநில பிரிவு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. அதில் அக்கட்சி கூறியிருந்ததாவது:-

தேர்தல்களின்போது வாக்குச்சாவடிகளில் வரிசை தொடங்கும் இடத்தில், மது அருந்தி இருப்பதை கண்டறியும் 'பிரீத் அனலைசர்' கருவியை வைக்க உத்தரவிட வேண்டும். அதன்மூலம் வாக்காளர்களிடம் சோதனை நடத்தப்பட வேண்டும்.

மது அருந்தாதவர்களை மட்டும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

### விளம்பர நோக்கம்

இந்த மனு, நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, திபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது:-

என்ன இது? இந்த மனு, விளம்பர நல மனுவாக தெரிகிறது. தேர்தல் நாளில் மதுக்கடைகள் மூடப்பட்டு இருக்கும். போலீசார் எல்லா இடத்திலும் இருப்பார்கள். இந்த மனுவை ஏற்க முடியாது.

இவ்வாறு நீதிபதிகள் கூறினர். மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

The Supreme Court dismissed a petition to conduct test that the voters are in the influence of alcohol.

தினத்தந்தி

11 APR 2024

போலீசார் வாக்களிப்பதற்கு ஏதுவாக

# சென்னையில் சிறப்பு தபால் வாக்குச்சாவடி மையங்கள்

## 3 நாட்களுக்கு ஏற்பாடு

சென்னை, ஏப்.11-

நாடாளுமன்ற தேர்தலில் சென்னை மாநகர போலீசார் அனைவரும் இன்று (வியாழக்கிழமை), நாளை (வெள்ளிக்கிழமை) மற்றும் நாளை மறுதினம் (சனிக்கிழமை) ஆகிய 3 நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தபால் வாக்கு செலுத்த சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 3 தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அலுவலகத்தில் சிறப்பு தபால் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை வண்ணாரப்பேட்டை பேசின்பிரிட்ஜ் ரோட்டில் உள்ள வடசென்னை தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் வடசென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, ஆரணி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், பெரம்பலூர் ஆகிய நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட போலீசார் தபால் வாக்கு செலுத்தலாம்.

சென்னை அடையாறு, முத்துலட்சுமி சாலையில் உள்ள தென் சென்னை தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் தென்சென்னை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி தொகுதிக்கு உட்பட்ட போலீசார் வாக்கு அளிக்கலாம்.

சென்னை செனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள மத்திய சென்னை தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் மத்திய சென்னை, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம், நீலகிரி, கோவை, பொள்ளாச்சி, திண்டுக்கல், கரூர், திருச்சி, கடலூர், சிதம்பரம் மற்றும் புதுச்சேரி தொகுதிக்கு உட்பட்ட போலீசார் சென்று வாக்கு செலுத்தலாம். தபால் வாக்கு செலுத்த விண்ணப்பித்த அனைத்து போலீஸ் அதிகாரிகள், போலீசார் தகுந்த ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

News regarding postal vote for police at chennai

தினத்தந்தி

11 APR 2024

தேர்தல் நாளில் விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் குறித்து புகார் தெரிவிக்க

# சென்னை மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர்கள் நியமனம்

## செல்போனில் தொடர்பு கொள்ளலாம்

சென்னை, ஏப்.11-

சென்னை தொழிலாளர் இணை ஆணையர் - 1 வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

நாடாளுமன்ற தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நாளான வருகிற 19-ந் தேதி விடுமுறை அளிக்க தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது குறித்து புகார் அளிக்க வடசென்னை, தென்சென்னை, மத்திய சென்னை என தனித்தனியாக கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளன.

விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக தொழிலாளர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர்களை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். அதன் விவரம் வருமாறு:-

வடசென்னை - தொழிலாளர் துணை ஆய்வாளர் சி.விஜயலட்சுமி - 9840829835, தென் சென்னை - தொழிலாளர் துணை ஆய்வாளர் இ.ஏகாம்பரம் - 9790930846, மத்திய சென்னை - தொழிலாளர் துணை ஆய்வாளர் வேதநாயகி - 9884264814. மேலும், சென்னை மாவட்டம் முழுமைக்கும் 044-24330354 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Mobile Number were shoud to the public to complaint against the companies who fails to give pay holiday on polling day.

தினமலர்
11 APR 2024

# சிறப்பு கவனம்!

## • ஓட்டுப்பதிவு 40 சதவீதமாக சரிந்த இடங்களில்...
## • 2,628 சாவடிகளில் 60 சதவீதத்திற்கும் குறைவு

**சென்னை, ஏப். 11–**

**சென்னையின் மூன்று தொகுதிகளில் 2019ல் நடந்த லோக்சபா தேர்தலில், 2,628 ஓட்டுச்சாவடிகளில், 60 சதவீதத்திற்கும் கீழ் ஓட்டு பதிவாகி உள்ளது. மேலும், 74 ஓட்டுச்சாவடிகளில், 40 சதவீதத்திற்கும் கீழ் ஓட்டுப்பதிவாகி இருப்பதால், அந்த பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக, இந்திய தேர்தல் கமிஷனிடம், சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

கடந்த 2019 லோக்சபா தேர்தலில், தமிழகத்தில் 72.44 சதவீதம் ஓட்டு பதிவானது. அதேநேரம், மிகக் குறைந்த அளவாக சென்னை மாவட்டத்தில் 60.16 சதவீதம் மட்டுமே பதிவாகி, கடைசி இடம் பிடித்தது.

படித்தவர்கள், வசதி படைத்தவர்கள் அதிகம் இருந்தும், சென்னை மக்கள், ஜனநாயக கடமையை செய்ய தவறி வருகின்றனர்.

அதற்கு அடுத்தடுத்து நடந்த 2021 சட்டசபை தொகுதி தேர்தலில், சென்னை மாவட்டத்தில் 59.40 சதவீதமும், 2022ல் நடந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 43.65 சதவீதம் என தொடர்ந்து, சென்னையில் ஓட்டு சதவீதம் குறைந்து வருகிறது.

சென்னையில் ஓட்டு சதவீதம் குறைய, பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. குறிப்பாக, வாடகை வீட்டில் இருப்போர், ஒரு தொகுதியில் இருந்து மற்றொரு தொகுதி பகுதியில் வாடகைக்கு சென்றால், வாக்காளர் அட்டையில் முகவரி மாற்றாமல் இருப்பது மற்றும் தேர்தல் நேரத்தில் பழைய இடத்திற்கு சென்று ஓட்டளிக்காமல் இருப்பது உள்ளிட்டவை காரணமாக கூறப்படுகிறது.

அதேபோல், பலர் சொந்த ஊர்களுக்கு செல்வதும், சுற்றுலா செல்வதும், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் மீதான அதிருப்தி, சுட்டெரிக்கும் வெயில் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், ஓட்டு சதவீதம் குறைந்ததாக தெரியவந்தது.

இந் நி லை யி ல் , சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன், 2019 லோக்சபா தேர்தலில் எந்தெந்த பகுதிகளில் ஓட்டு சதவீதம் குறைந்தது. அங்கு 100 சதவீதம் ஓட்டளிப்பதன் அவசியம் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ளவிழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பாக, இந்திய தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பித்து உள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:

சென்னை மாவட்டத்தில், 2019 தேர்தலில், 10 இடங்களில் 60 சதவீதத்திற்கும் கீழ் ஓட்டுப்பதிவு நடந்துள்ளது. குறிப்பாக, 74 ஓட்டுச்சாவடிகளில், 40 சதவீதத்திற்கு கீழ் பதிவாகி இருந்தது. அதேபோல், 676 ஓட்டுச்சாவடிகளில் 50 சதவீதத்திற்கு கீழ் பதிவானது. 1,888 ஓட்டுச்சாவடிகளில் 60 சதவீதத்திற்கும் கீழ் ஓட்டுகள் பதிவானது. மொத்தம், 2,628 ஓட்டுச்சாவடிகளில் மிகக் குறைந்த அளவில் ஓட்டுப்பதிவு நடந்து உள்ளது.

சட்டசபை தொகுதி வாயிலாக அந்த இடங்கள் கணக்கெடுக்கப்பட்டு, வரும் தேர்தலில் அப்பகுதியில் ஓட்டு சதவீதத்தை அதிகரிக்கும் வகையில், கலை நிகழ்ச்சிகள், துண்டு பிரசுரங்கள், இசை நிகழ்ச்சிகள் என, பல்வேறு வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஓட்டுச்சாவடி இடங்களில் குடிநீர், கழிப்பறை, பந்தல் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள், முதியோர் நேரில் வந்து ஓட்டளிக்கும் வகையிலும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, இத்தேர்தலில் சென்னை மாவட்டத்தில் ஓட்டுப்பதிவு சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது;

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஓட்டு சதவீதம் குறைந்த ஓட்டுச்சாவடிகள்**

| தொகுதி | ஓட்டுப்பதிவு சதவீதம் | 40 சதவீதம் | 50 சதவீதம் | 60 சதவீதம் |
|---|---|---|---|---|
| வில்லிவாக்கம் | 56.91 | 5 | 27 | 135 |
| துறைமுகம் | 57.08 | 1 | 18 | 98 |
| தி.நகர் | 57.44 | 1 | 23 | 133 |
| வேளச்சேரி | 57.78 | 0 | 28 | 138 |
| சைதாப்பேட்டை | 57.81 | 5 | 32 | 125 |
| ஆயிரம் விளக்கு | 57.84 | 5 | 25 | 110 |
| விருகம்பாக்கம் | 58.24 | 1 | 26 | 132 |
| அண்ணா நகர் | 58.68 | 4 | 16 | 129 |
| மயிலாப்பூர் | 58.70 | 2 | 22 | 129 |
| சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | 59.70 | 1 | 8 | 102 |
| திருவொற்றியூர் | 0 | 0 | 11 | 115 |
| சோழிங்கநல்லூர் | 55.51 | 10 | 226 | 500 |

News regarding Special attention on low turnout polling stations

தினமலர்

11 APR 2024

# 11,843 இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி

சென்னை மாவட்டத்தின் 16 சட்டசபை தொகுதிகளுக்கான மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று துவங்கியது.

ஜார்ஜ் டவுன், பிரகாசம் சாலையில் உள்ள பாரதி மகளிர் கல்லுாரியில், மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் நேற்று ஆய்வு செய்தார்.

பின், மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் அளித்த பேட்டி:

தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி, நாளை வரை மூன்று நாட்களுக்கு நடக்கும்.

ஓட்டுப்பதிவிற்கு 11,843 மின்னணு இயந்திரங்கள், 4,469 கட்டுப்பாட்டு கருவிகள், 4,842 வாக்காளர் சரி பார்க்கும் காகித தணிக்கை சோதனை கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

மத்திய சென்னையில், 31 வேட்பாளர்கள் இருப்பதால், இரண்டு மின்னணு ஓட்டுப்பதிவும், தென்சென்னையில் 41 வேட்பாளர்கள்; வடசென்னையில் 35 வேட்பாளர்கள் இருப்பதால், அங்கு தலா மூன்று ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. வாக்காளர் 'பூத் சிலிப்' இதுவரை 16.7 லட்சம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



லோக்சபா தேர்தலை முன்னிட்டு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் கட்சியின் வேட்பாளர் சின்னத்துடன் புகைப்படம் மற்றும் பெயர் பொருத்தும் பணி நடந்து வருகிறது. இடம்: பாரதி மகளிர் கல்லுாரி, பிராட்வே.

News regarding 11,843 EVMs were used to fitting the candidate name & symbols.

தினமலர்
01 APR 2024

நேற்றைய ரெய்டு

# தி.மு.க., நிர்வாகிகள் வீடுகளில் வருமான வரித்துறை சல்லடை

– நமது நிருபர் –

கடலூர் மாவட்டத்தில் தி.மு.க., – பா.ம.க., மற்றும் அ.தி.மு.க., நிர்வாகிகள் வீடுகளில் வருமான வரித்துறையினர் நடத்திய அதிரடி சோதனை அரசியல் கட்சியினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கடலூர் மாவட்டம், குமராட்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க., செயலர் சங்கர். சிதம்பரம் மாரியப்பா நகர், ராஜேந்திரன் கார்டனில் தங்கி, சிதம்பரம் லோக்சபா தொகுதி வி.சி., வேட்பாளர் திருமாவளவனுக்கு தேர்தல் பணியை கவனித்து வருகிறார்.

இவர் பொறுப்பு வகிக்கும் பகுதியில் நேற்று முன்தினம் திருமாவளவன் பிரசாரம் மேற்கொண்டார். அன்று இரவு திருமாவளவன் சிதம்பரத்தில் தங்கியுள்ள வீட்டில் வருமான வரித்துறையினர் அதிரடியாக சோதனை நடத்தினர்.



சிதம்பரத்தில் தங்கியுள்ள குமராட்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க., ஒன்றிய செயலர் சங்கர் வீட்டில், பறக்கும் படை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

**கடலூர்**

இந்த பரபரப்பு அடங்கும் முன், தி.மு.க., ஒன்றிய செயலர் சங்கர் தங்கியுள்ள வீட்டில், நேற்று மாலை, தேர்தல் பறக்கும் படை அதிகாரி சரவணன் தலைமையிலான குழுவினர் சோதனை செய்தனர்; பின் அவரது காரை சோதனை செய்தனர்.

பறக்கும் படை சோதனையில் எதுவும் சிக்காத நிலையில், அவரது வீட்டில் 6 கோடி ரூபாய் பணம் இருப்பதாக எழுந்த, புகாரின் படி, கடலூர் வருமான வரித்துறை அதிகாரி பாலமுருகன் தலைமையிலான ஐந்து பேர் அடங்கிய குழுவினர், வீடு முழுதும் சோதனையிட்டனர். அதையறிந்த தி.மு.க.,வினர் சங்கர் வீட்டின் முன் திரண்டதால் பரபரப்பு நிலவியது.

வருமான வரித்துறையினர் ஒரு மணி நேரம் நடத்திய சோதனையில் எதுவும் சிக்காததால், ஏமாற்றத்துடன் திரும்பினர்.

**ஸ்ரீமுஷ்ணம்**

இதேபோல், வேளாண் அமைச்சர் பன்னீர்செல்வம் உறவினரான ஸ்ரீமுஷ்ணம் தி.மு.க., ஒன்றிய செயலர் தங்க ஆனந்தன் வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனை மேற்கொண்டனர். அங்கும் எதுவும் சிக்கவில்லை.

தொடர்ந்த அதே பகுதியில் வசித்து வரும் அ.தி.மு.க., ஜெ., பேரவை மாவட்ட இணைச் செயலர் கானூர் பாலசுந்தரம் வீட்டில் நடத்திய சோதனையில் ரூ.12 லட்சம் ரொக்கம் சிக்கியது.

அதற்கு ஆவணங்கள் இருப்பதாக பாலசுந்தரம் கூறியதால், பணத்தை திருப்பிக் கொடுத்த அதிகாரிகள், இன்று உரிய ஆவணங்களுடன் அலுவலகத்தில் நேரில் ஆஜராகுமாறு கூறிச் சென்றனர்.

**விருத்தாசலம்**

மேலும், விருத்தாசலம் அடுத்த எருக்கன்குப்பத்தைச் சேர்ந்த பா.ம.க., மாநில இளைஞர் சங்க செயலர் சுரேஷ் வீட்டில், ஏழு பேர் கொண்ட வருமான வரித்துறை குழுவினர் சோதனை நடத்தினர். மாலை 6:15 மணி வரை நடந்த சோதனையில் ஆவணங்கள் எதுவும் சிக்கவில்லை.

வி.சி., தலைவர் திருமாவளவன் வெற்றியை தடுக்கும் வகையில், அவரது வீட்டிலும் தி.மு.க., நிர்வாகிகள் வீட்டிலும் சோதனை நடத்தியதாகவும், கண்துடைப்புக்காக அ.தி.மு.க., மற்றும் பா.ம.க., நிர்வாகிகள் வீடுகளில் சோதனை நடந்ததாக தி.மு.க.,வினர் ஆதங்கப்பட்டனர்.

News regarding IT Dept Raid at DMK's party persons house.

தினமலர்
11 APR 2024

# தேர்தல் புறக்கணிப்பு அறிவிப்பு மக்களிடம் பேச்சு நடத்த அறிவுரை

சென்னை, ஏப். 11-

தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ள மக்களை சமாதானப்படுத்தி, ஓட்டளிக்க வைக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி, மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு, தேர்தல் கமிஷன் அறிவுறுத்தி உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பரந்துார் விமான நிலையம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஏகனாபுரம் கிராம மக்கள், தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதுபோல், தமிழகம் முழுதும் ஓரிரு இடங்களில் சில கோரிக்கைகளை முன்வைத்து, தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அப்பகுதி மக்கள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு கூறுகையில், ''தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்துள்ள பகுதிகளில், அப்பகுதி மக்களுடன் பேச்சு நடத்தி, அவர்களை சமாதானப்படுத்தி, தேர்தலில் அவர்கள் ஓட்டளிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி, மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது,'' என்றார்.

உரிமையை மறக்காதீர்
100%
வாக்குப்பதிவு நம் இலக்கு
தினமலர்
உண்மையின் உரைகல்
வாக்களிக்க தவறாதீர்

ECI instruct DEO's to talk with the people who says boycott the Election for same issues.

தினமலர்
11 APR 2024

# 55 சதவீதம் பேர் தபால் ஓட்டளிப்பு

**சென்னை, ஏப். 11–** தபால் ஓட்டளிக்க விருப்பம் தெரிவித்த, 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளில், 55 சதவீதம் பேர் நேற்று முன்தினம் வரை ஓட்டளித்துள்ளனர்.

தமிழகத்தில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரில், வீட்டில் இருந்து ஓட்டளிப்பவர்கள், விண்ணப்பம் அளிக்கலாம் என, தேர்தல் கமிஷன் அறிவித்தது.

அதன்படி வீட்டிலிருந்தபடி ஓட்டளிக்க விருப்பம் தெரிவித்து, 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் 82,666 பேர்; மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் 50,665 பேர் விண்ணப்பம் அளித்தனர். அவர்களின் வீடுகளுக்கு சென்று, தபால் ஓட்டு பெறும் பணி தற்போது தமிழகம் முழுதும் நடந்து வருகிறது.

ஓட்டுச்சாவடி அலுவலர், போலீசார், அரசியல் கட்சி பிரதிநிதிகள், சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு சென்று, அவர்களிடம் தபால் ஓட்டுகளை வழங்கி, அவர்கள் ரகசியமாக ஓட்டை பதிவு செய்து, தாங்கள் கொண்டு செல்லும் பெட்டியில் தபால் ஓட்டை போட வைக்கின்றனர்.

நேற்று முன்தினம் வரை, மொத்த வாக்காளர்கள், 1,33,339 பேரில், 70,258 பேர் ஓட்டளித்துள்ளனர். தபால் ஓட்டுகளை பெறும் பணி, வரும் 18ம் தேதி வரை நடக்கும் என, தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

தபால் ஓட்டளிப்போருக்கு, பணம் கொடுக்கப்பட்டதாக, புகார்கள் எதுவும் வரவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

55% of postal vote were cast by 85+ years persons & PwDs.

தினமலர்
11 APR 2024

## 'ஏசி' வியாபாரியிடம் ரூ.95,000 பறிமுதல்

**கொடுங்கையூர், ஏப். 11–**

கொடுங்கையூர், எழில் நகர் மேம்பாலத்தில், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள், நேற்று வாகன சோதனை நடத்தினர்.

பைக்கில் வந்த நபரிடம் சோதனை செய்ததில், 95,000 ரூபாய் உரிய ஆவணமின்றி எடுத்து சென்றது தெரியவந்தது.

விசாரணையில், பழைய வண்ணாரப்பேட்டை, போஜராஜன் நகர் லப்பை தெருவைச் சேர்ந்த இப்ராகிம், 38, என்பதும், பழைய 'ஏசி' வாங்கி மறுவிலைக்கு விற்பவர் என்பது தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தால், அப்பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

95,000 was seized by flying squad.

தினமணி

11 APR 2024

# ரூ.5 லட்சம் வரை பணம் எடுத்துச் செல்ல அனுமதிக்க வியாபாரிகள் கோரிக்கை

சென்னை, ஏப்.10: குறைந்தபட்ச ஆவணங்களுடன் ரூ.5 லட்சம் வரை எடுத்து செல்ல அனுமதிக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு கோயம்பேடு வியாபாரிகள் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இது குறித்து கோயம்பேடு வணிகவளாக காய், கனி, மலர், உணவு தானிய அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பினர் எழுதிய கடிதம்:

கோயம்பேடு வணிகவளாகம் வியாபாரிகள் வியாபாரம் மூலம் கிடைக்கும் பணத்தை வங்கியில் செலுத்த கொண்டு செல்லும் போது, பறக்கும் படை அதிகாரிகள் அவற்றை பறிமுதல் செய்து விடும் நிகழ்வுகள் அவ்வப்போது நடைபெற்று விடுகிறது.

எங்களிடம் இருக்கும் ஆவணங்களை மட்டும் வைத்து குறைந்தபட்சமாக ரூ.5 லட்சம் வரை எடுத்து செல்ல அனுமதிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Koyambedu Merchants requested CEO TN to carry upto Rs5lakhs for business

தினமணி
11 APR 2024

# தயாநிதி மாறன் காரில் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை

**சென்னை, ஏப்.10:** மத்திய சென்னை திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் சென்ற வாகனத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நிறுத்தி சோதனையிட்டனர்.

பிரசாரத்துக்காக தயாநிதி மாறன் தனது காரில் புதன்கிழமை வால்டாக்ஸ் சாலை வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது, அந்தப் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள், தயாநிதி மாறனின் காரை நிறுத்தினர். இதையடுத்து, தயாநிதி மாறன் காரைவிட்டு இறங்கி சாலையோரம் நின்றார்.

அவரின் காரை அதிகாரிகள் முழுமையாக சோதனையிட்டனர். காரில் பொருள்களோ, பணமோ கைப்பற்றப்படவில்லை. இதையடுத்து வாகனத்தை அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.

Flying Squad checks DMK Candidate Dayanidhi Maran's car

தினமணி

11 APR 2024

# தமிழகத்துக்கு கூடுதலாக ஊர்க்காவல் படை வருகை

## தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு

சென்னை, ஏப். 10: வெளி மாநிலங்களில் இருந்து கூடுதலாக ஊர்க்காவல் படைகள் வரவிருப்பதாக தலைமைத் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார். இது குறித்து, அவர் செய்தியாளர்களுக்கு புதன்கிழமை அளித்த பேட்டி:

தமிழகத்துக்கு தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட 190 கம்பெனி துணை ராணுவ படையினர் பல்வேறு மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தேவை அடிப்படையில், பல்வேறு தொகுதிகளுக்கு பிரித்து அனுப்பப்பட உள்ளனர்.

குறிப்பாக, பதற்றமான, மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் இவர்கள் அதிக அளவில் பணியமர்த்தப்படுகின்றனர்.

அந்த வகையில், சென்னை, மதுரை, கோவை மாவட்டங்களுக்கு தலா 7 கம்பெனிகளும், அடுத்ததாக தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூருக்கு தலா 6 கம்பெனிகளும், திருநெல்வேலி, விருதுநகர், திருப்பூர், சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு தலா 5 கம்பெனிகளும் பிரித்து அனுப்பப்பட உள்ளன.



தமிழக காவல் துறையின் அனைத்து படைப் பிரிவினர், ஊர்க்காவல் படையினர், முன்னாள் ராணுவத்தினரும் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர்.

இதில் ஊர்க்காவல் படையினர் போதிய அளவில் தமிழகத்தில் இல்லாத நிலையில், காவல் துறையின் மூலம், அருகில் உள்ள மாநிலங்களிலிருந்து ஊர்க்காவல் படையினர் வரவழைக்கப்பட உள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

News regarding 190 paramilitary companies were deployed.

தினமணி
11 APR 2024

# சின்னங்கள் பொருத்தும் பணி: மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு

சென்னை, ஏப்.10: சென்னை மாவட்டத்தில் உள்ள மக்களவைத் தொகுதியின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணி புதன்கிழமை தொடங்கியது.

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தும் பணி புதன்கிழமை முதல் தொடங்கியது.

துறைமுகம்,வேளச்சேரிசட்டப்பேரவை தொகுதியில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஜெ.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஏற்கெனவே வாக்குப்பதிவு இயந்திரங்கள் அந்தந்தசட்டப்பேரவை தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்து அனுப்பப்பட்டுவிட்டன.

இதில் வேட்பாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வடசென்னை, தென்சென்னை மக்களவைத் தொகுதிகளில் 3 வாக்குப்பதிவு இயந்திரங்களும், மத்திய சென்னையில் 2 வாக்குப்பதிவு இயந்திரங்களும் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர்கள், சின்னங்கள் பொருத்தும் பணியை புதன்கிழமை ஆய்வு செய்த மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.ராதாகிருஷ்ணன். உடன் மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார் உள்ளிட்டோர்.

| வாக்குச்சாவடி | வேட்பாளர்கள் | வாக்குப்பதிவு இயந்திரங்கள் |
|---|---|---|
| வடசென்னை | 35 | 3 |
| மத்திய சென்னை | 31 | 2 |
| தென்சென்னை | 41 | 3 |

அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சென்றடைந்த நிலையில் அந்த தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

இந்த பணி அடுத்த 3 நாள்கள் நடைபெறும். சென்னை மாவட்டத்தில் உள்ள 3 மக்களவைத் தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கு 11,843 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4,469 கட்டுப்பாட்டுக் கருவிகள், 4,842 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் (விவிபேட்) பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் 20 சதவீத கருவிகள் முன்னிருப்பாக வைக்கப்பட்டுள்ளன. சென்னையில் இதுவரை 16 லட்சத்து70 ஆயிரம் வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் (பூத் ஸ்லிப்) வழங்கப்பட்டுள்ளன.

**தபால் வாக்கு:** அரசுப் பணியில் உள்ள பணியாளர்கள் வாக்கு செலுத்தும் வகையில் தபால் வாக்கு செலுத்த அனுமதிக்கப்படுகின்றனர். அந்த வகையில் 14,735 அரசு ஊழியர்களும், 19,122 காவல் பணியாளர்களும் தபால் வாக்கு செலுத்தவுள்ளனர்.

இவர்கள் வாக்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபோல் சென்னையில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகள், முதியோர்கள் 1,003 பேர் தபால் வாக்கு செலுத்தியுள்ளனர்.

சென்னையில் தேர்தல் பறக்கும் படை மூலம் இதுவரை ரூ.14.73 கோடியும், வருமான வரித்துறை சார்பில் 19.92 கோடியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மதுபானம், போதைப் பொருள் உள்ளிட்ட 59.33 லட்சம் மதிப்பிலான பொருள்கள், கலால் துறை மூலம் ரூ.1 கோடியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

News regarding fitting Candidate Names & Symbol in Evms.

தினகரன்

11 APR 2024

பணம் பட்டுவாடா செய்பவர்களை கண்காணிக்க

# தேர்தல் செலவின சிறப்பு பார்வையாளர் அனைத்து மாவட்டத்துக்கும் செல்கிறார்



**தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்**

சென்னை, ஏப். 11: சென்னை, தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று அளித்த பேட்டி:

தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு பறக்கும் படை, கண்காணிப்பு நிலை குழு மற்றும் வருமான வரித்துறை சோதனையில் இதுவரை ₹255 கோடி பணம் மற்றும் தங்க நகை, பரிசு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதில் வருமான வரித்துறையினர் மட்டுமே ₹50.86 கோடி பறிமுதல் செய்துள்ளனர். தாம்பரம் ரயிலில் பறக்கும் படை சோதனையில்தான் ₹4 கோடி பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக வருமான வரித்துறையுடன் தேர்தல் செலவின பார்வையாளரும் சேர்ந்து சிறப்பு விசாரணை நடைபெற்று வருகிறது.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இதுவரை 1,07,186 தபால் வாக்குகளும், காவல் துறையினர் 1,07,186 தபால் வாக்குகளும் செலுத்தியுள்ளனர். டிரைவர், கிளீனர் என 3,423 பேர் தபால் வாக்கு பதிவிட்டுள்ளனர். தங்களது பெயர் எந்த தொகுதியில் உள்ளதோ அதே தொகுதிக்குள் பணியாற்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 1,75,606 பேர் வாக்குப்பதிவு அன்று தாங்கள் பணி செய்யும் வாக்குப்பதிவு மையங்களிலேயே வாக்களிப்பார்கள். அதேபோன்று 85 வயதுக்கு மேற்பட்ட 82,666 பேரும், மாற்றுத்திறனாளிகள் 50,665 பேரும் 12டி விண்ணப்பம் வாங்கி பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர். இவர்களில் இதுவரை 70,258 பேர் வீடுகளுக்கே சென்று தபால் வாக்கு பெறப்பட்டுள்ளது. 18ம் தேதி வரை இந்த பணிகள் நடைபெறும்.

வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய வாய்ப்புள்ளதாக பல்வேறு தரப்பினரும் கூறி வருகிறார்கள். இதையொட்டி தமிழகத்திற்காக நியமிக்கப்பட்ட தேர்தல் செலவின சிறப்பு பார்வையாளர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நேரில் சென்று, அங்குள்ள மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். பணம் கொடுப்பதாக வந்த புகார் மீது எடுக்கும் விசாரணைகள் ரகசியமாக வைக்கப்பட்டு, நேரடியாக இந்திய தலைமை தேர்தல் ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். தேர்தல் ஆணையம் அறிவுறுத்திய படி நடக்காமல் பணியில் மெத்தனமாக இருக்கும் பறக்கும் படை அதிகாரிகள் சிலர் மீது சஸ்பெண்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் தேர்தல் முடிந்த பிறகு பணியில் தொடருவது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் அல்லது மாவட்ட தேர்தல் அதிகாரிதான் முடிவு செய்து அறிவிப்பார்.

பதற்றமான வாக்குச்சாவடி மையங்களுக்கு கூடுதல் துணை ராணுவம் அனுப்பி வைக்கப்படும். இதுகுறித்து அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்கள் பார்த்து அதற்கேற்ப முடிவு செய்வார்கள். வெளி மாநிலங்களில் இருந்து ஊர் காவல் படை வீரர்களை அனுப்பும்படி போலீஸ் தரப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேட்பாளர்கள் மீது இதுவரை எந்த தனிப்பட்ட புகாரும் வரவில்லை. சி-விஜில் மூலம் 3,221 புகார் வந்துள்ளது. அதுகுறித்து உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 24 புகார்கள் மீது மட்டுமே இன்னும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தவர்களிடம் பேச்சு

தேர்தலை புறக்கணிக்கப்போவதாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு பகுதியில் உள்ள சிலர் அறிவித்து உள்ளனர். அவர்களிடம் மாவட்ட தேர்தல் அதிகாரி நேரடியாக சென்று பேச்சுவார்த்தை நடத்துவார். வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துச் சொல்லி, அவர்களை கண்டிப்பாக வாக்களிக்க வலியுறுத்தப்படும். பிரச்னைகளை தீர்த்து வைக்க முடிந்தால் அதையும் செய்வார். பேச்சுவார்த்தையையும் மீறி தேர்தலை புறக்கணித்தால் எதுவும் செய்ய முடியாது. சுகி, ஷோமோட்டா மற்றும் இணையதளங்களில் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று விளம்பரம் செய்யலாம். அனுமதி பெறாமல் விளம்பரம் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

Election Expenditure observer for all districts for close Surveillance of Money distribution.

தினகரன்

11 APR 2024

வாக்காளர்களுக்கு பல கோடி ரூபாய் பதுக்கியதாக தகவல்

# சென்னை தொழிலதிபர் தியாகராஜன் வீடு, அலுவலகத்தில் ஐடி சோதனை

## முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக தகவல்

சென்னை,ஏப்.11: வாக்காளர்களுக்கு கொடுக்க பல கோடி பணத்தை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் படி, சென்னை கே.கே.நகர், அசோக் நகரில் தொழிலதிபரும் அரசு ஒப்பந்ததாரருமான தியாகராஜன் வீடு மற்றும் ஆபீசில் வருமான வரித்துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை பறிமுதல் செய்தனர்.

சென்னை கே.கே.நகர் 11வது ஷெக்டர் 66வது தெருவை சேர்ந்தவர் தியாகராஜன்(55). தொழிலதிபரான இவர், இன்ஜினியரிங் கல்லூரி நடத்தி வருகிறார். அரசு ஒப்பந்ததாரரான தியாகராஜன் எடப்பாடிக்கு நெருக்கமானவர் என்று கூறப்படுகிறது.

நாடாளுமன்ற தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதற்காக பல கோடி ரூபாய் இவரது வீடு மற்றும் அசோக் நகர் 15வது அவென்யூவில் உள்ள அலுவலகத்தில் பதுக்கி வைத்திருப்பதாக, வருமான வரித்துறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்படி வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு 3 கார்களில் வந்து தொழிலதிபர் தியாகராஜன் வீடு, மற்றும் அவரது அலுவலகத்தில் திடீர் சோதனை நடத்தினர். 4 மணி நேரம் நீடித்த சோதனை இரவு 10 மணிக்கு முடிந்தது. இந்த சோதனையில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், கடந்த ஒரு வாரத்தில் பல கோடி ரூபாய் பணம் பரிவர்த்தனை நடந்ததற்கான ஆவணங்கள் மற்றும் வங்கி கணக்குகள் உள்ளிட்ட பல முக்கிய ஆவணங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்ததாக கூறப்படுகிறது.

IT Dept Raid at contractor Thiagarajan house/office in Ashok Nagar.

தினகரன்

11 APR 2024

வாக்களிப்பதற்கு எந்த வசதியும் செய்து தரவில்லை

# ஓட்டுநர், நடத்துநர்களுக்கு தபால் வாக்கு முறை

## போக்குவரத்து தொழிலாளர்கள் கோரிக்கை

சென்னை, ஏப்.11: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 19ம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் பணியில் இருக்கும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தேர்தல் நாளில் வாக்கு செலுத்த முடியாது என்பதால் அவர்களுக்கு தபால் வாக்கு அளிக்கும் நடைமுறை இருக்கிறது. ஆனால் வாக்குப்பதிவு நாளில் போக்குவரத்து துறையில் இருக்கும் பேருந்து ஓட்டுநர்கள், ரயில்வே பணியாளர்கள் பணிக்கு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் நடைமுறையை கொண்டு வர தொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

இது குறித்து ஏஐடியுசி பொதுச்செயலாளர் ஆறுமுகம் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் அரசு போக்குவரத்து கழகத்தில் சுமார் 311 பணிமனைகள் உள்ளது. இதில் சுமார் 1 லட்சத்து 27 ஆயிரம் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். மாநிலம் முழுவதும் சிறப்பு பேருந்துகள் உட்பட 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் தொலைதூரம் பணிக்குச் செல்லும் புறநகர் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் 19ம் தேதி அதிகாலையில் பேருந்தை இயக்கி நடு இரவில் பணி முடிப்பதால் தங்கள் வாக்குகளை செலுத்த முடியாத பணிச் சூழல் உள்ளது. ஒவ்வொரு தேர்தலிலும் தொலைதூரத்தில் பணியாற்றக்கூடிய ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்களது பணி சூழல்களினால் தாங்கள் விரும்பும் கட்சிக்கு வாக்களிக்க முடியாத நிலை தொடர்கிறது.

இந்த பிரச்னைக்கு நிரந்தரமாக தீர்வு காண தேர்தல் அன்று பணிக்கு வரும் ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு தபால் வாக்கு முறை உள்ளது போல, தொலைதூர பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர், நடத்துநர்களுக்கும் தபால் வாக்குகளை அளிக்கும் முறையை வருங்காலங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும். அன்றைய தினம் அரசு போக்குவரத்து கழக நிர்வாகங்கள் வாக்களிக்க ஏதுவாக பேருந்து இயக்கத்தை மாற்றி அமைத்திட வேண்டும் என்றார்.

Transport Dept Demands postal vote for Drivers & Conductors.

தினகரன்

11 APR 2024

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 மக்களவை தொகுதிகளிலும் உள்ள

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஒட்டும் பணி தொடங்கியது

சென்னை, ஏப். 11: தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகளிலும் பயன்படுத்த உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் ஒட்டும் பணி நேற்று தொடங்கியது. வாக்குப்பதிவுக்கு இன்னும் 8 நாட்களே உள்ள நிலையில் அனல் பறக்கும் பிரசாரத்தில் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 மக்களவை தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு வரும் 19ம்தேதி (வெள்ளி) ஒரே கட்டமாக நடைபெறுகிறது. வாக்குப்பதிவுக்கு இன்னும் 8 நாட்களே உள்ளதால் தமிழகத்தில் அனல் பறக்கும் பிரசாரத்தில் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். திமுக, அதிமுக, பாஜ தலைமையில் தனித்தனி கூட்டணியும், நாம் தமிழர் கட்சி தனியாகவும், சுயேச்சைகள் என மொத்தம் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.


**இன்னும் 8 நாட்களே உள்ளதால் அனல் பறக்கும் பிரசாரம்**

> 15 வேட்பாளர்களுக்கு மேல் ஒரு தொகுதியில் போட்டியிட்டால் ஒவ்வொரு 16 வேட்பாளர்களுக்கும் கூடுதலாக ஒரு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்படும்

இந்த தேர்தலில் வட சென்னையில் 35 வேட்பாளர்களும், தென்சென்னையில் 41 வேட்பாளர்களும், மத்திய சென்னையில் 31 வேட்பாளர்களும் களம் காணுகின்றனர். காஞ்சிபுரத்தில் 11 பேர், திருவள்ளூரில் 14 பேர், ஸ்ரீபெரும்புதூரில் 31 பேர் போட்டியிடுகிறார்கள். அதிகப்பட்சமாக கரூர் தொகுதியில் 54 பேரும், குறைந்தபட்சமாக நாகப்பட்டினத்தில் 9 பேரும் போட்டியிடுகிறார்கள். 39 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு இயந்திரம் தயார்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதில் நோட்டாவும் இடம் பெறும். 15 வேட்பாளர்களுக்கு மேல் ஒரு தொகுதியில் போட்டியிட்டால் ஒவ்வொரு 16 வேட்பாளர்களுக்கும் கூடுதலாக ஒரு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்படும்.

அதன்படி சென்னையில் வேட்பாளர்கள் எண்ணிக்கை அதிகம் என்பதால் 2 மற்றும் 3 வாக்குப்பதிவு இயந்திரம் கூடுதலாக வைக்கப்படும். மத்திய சென்னையில் 31 வேட்பாளர்கள் என்பதால் 2 வாக்குப்பதிவு இயந்திரமும், வடசென்னையில் 35 வேட்பாளர்களும், தென்சென்னையில் 41 வேட்பாளர்களும் இருப்பதால் தலா 3 வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட உள்ளது.

தமிழகம் முழுவதும் மொத்தம் 68,321 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட உள்ளது. இந்த மையங்களில் பொதுமக்கள் பாதுகாப்பாக சென்று வாக்களிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு உத்தரவிட்டுள்ளார். சென்னை மாவட்டத்தில் 3,726 வாக்குச்சாவடி மையங்கள் 944 பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அதற்கு தேவையான 11,843 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 4,469 கட்டுப்பாட்டு கருவிகளும், 4,852 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகளும் (வி.வி.பேட்) சென்னை சிந்தாதிரிப்பேட்டை பாதுகாப்பு மையத்தில் இருந்து 16 சட்டமன்ற தொகுதிகளின் பாதுகாப்பு மையத்திற்கும் தேவைக்கேற்ப ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டது.



▶ நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 19ம் தேதி நடைபெற உள்ள நிலையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர்களின் பெயர், சின்னம் ஒட்டும் பணி, சென்னை, அரும்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள தனியார் கல்லூரி மையத்தில் நேற்று தேர்தல் அதிகாரிகள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடந்தது.

இந்நிலையில், வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிட்டதைத் தொடர்ந்து, வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொருத்தக்கூடிய வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் அச்சடிக்கும் பணி கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்தது. தற்போது அந்த பணிகள் முடிவடைந்துள்ளது. அதைத்தொடர்ந்து தமிழகம் முழுவதும் 39 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொருத்தும் பணி நேற்று (புதன்) வேட்பாளர்கள் மற்றும் கட்சி ஏஜெண்டுகள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த பணிகள் அனைத்தும் இன்று அல்லது

2ம் பக்கம் பார்க்க

**வாக்குப்பதிவு இயந்திரங்களில்...**

முதல் பக்க தொடர்ச்சி

நாளைக்குள் முடிவடையும். பின்னர் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும்.

இதைத்தொடர்ந்து 18ம் தேதி மாலை அனைத்து வாக்குப்பதிவு மையங்களுக்கும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்படும். தமிழகத்தில் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களான 8,050 மையங்களில் கூடுதல் துணை ராணுவ வீரர்கள் பாதுகாப்பு மற்றும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு, வாக்குப்பதிவு தீவிரமாக கண்காணிக்கப்படும். முன்னதாக, இந்த வாக்குச்சாவடிகளுக்கு ரேண்டம் முறையில் தேர்வு செய்யப்பட்டு போலீசார் அனுப்பி வைக்கப்பட உள்ளனர். இதற்கான தேர்வு பணி நேற்று முன்தினம் தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது.

News regarding fitting of candidate Names and Symbols in EVM's

தினகரன்

11 APR 2024

# பைக்குகளில் எடுத்துச்சென்ற ₹1.45 லட்சம் பறிமுதல்

தண்டையார்பேட்டை, ஏப்.11: கொடுங்கையூர் எழில் நகர் பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி பழனி, உதவி ஆய்வாளர் கதிரவன் தலைமையில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது வண்ணாரப்பேட்டை ஹவுசிங் போர்டைச் சேர்ந்த ஜாபர் செரிப் (31) என்பவர் எடுத்து வந்த ₹95 ஆயிரத்து 250ஐ பறிமுதல் செய்தனர்.

பெரம்பூர்: பெரவள்ளூர் பேப்பர் மில்ஸ் சாலையில் நேற்று முன்தினம் மாலை தேர்தல் பறக்கும் படை அதிகாரி தேவதாஸ் தலைமையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக பைக்கில் பெரம்பூர் திட்டி தோட்டம், 3வது தெருவைச் சேர்ந்த முகமது அப்சல் என்பவர் எடுத்து வந்த ₹50 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். அவரிடம் பணத்திற்கு போதிய ஆவணங்கள் இல்லை.

1.45 lakhs were seized by flying Squad.

தினகரன்

11 APR 2024

### தேர்தல் நாளன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை

# விடுமுறை அளிக்க தவறும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## தொழிலாளர் நலத்துறை எச்சரிக்கை

சென்னை, ஏப்.11: ஏப்.19ம் தேதி தேர்தல் நாளன்று அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்றும் விடுமுறை அளிக்க தவறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழிலாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் மு.வே.செந்தில் குமார் வெளியிட்ட அறிக்கை:

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற ஏப்ரல் 19ம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 135பி-ன் படி தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் தினக்கூலி, தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தேர்தல் நாளன்று அவர்கள் வாக்களிக்க ஏதுவாக அன்றைய தினம் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் வாக்குப்பதிவு நாளான ஏப்.19ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும். தேர்தல் நாளன்று விடுமுறை அளிக்க தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது குறித்து புகார் அளிக்க ஏதுவாக தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கம் சார்பில் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை மற்றும் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. எனவே. விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் மீது புகார்கள் இருப்பின் பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் கீழ்கண்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

| மாநில மற்றும் மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் | தொலைபேசி எண் |
|---|---|
| எம்.வி.கார்த்திகேயன், இணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், தமிழ்நாடு மாநில கட்டுப்பாட்டு அறை அலுவலர் | 9444221011 |
| சா.இளவரசன், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் | 6374160918 |
| கோ.அசோக், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், செங்கல்பட்டு மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் | 9025155455 |
| பா.பாலமுருகன், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், காஞ்சிபுரம், மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் | 8667222871 |
| கே.திவ்யா, துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவள்ளூர் மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் | 9952000256 |

Mobile Number were shared to the public to complaint against the companies who fails to give pay holiday on Polling day.

தினகரன்

11 APR 2024

## 16.7 லட்சம் பேருக்கு பூத் சிலிப் விநியோகம்

# சென்னையில் இதுவரை 1003 பேர் தபால் வாக்கு

## மாவட்ட தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, ஏப். 11: சென்னையில் உள்ள மூன்று எம்பி தொகுதிகளில் இதுவரை 1003 பேர் தபால் வாக்கு பதிவு செய்து இருப்பதாகவும், 16.7 லட்சம் பேருக்கு பூத் சிலிப் விநியோகம் செய்யப்பட்டு இருப்பதாகவும் மாவட்ட தேர்தல் அதிகாரி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது. இதனைதொடர்ந்து, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, ஜார்ஜ் டவுன், பிரகாசம் சாலையில் உள்ள பாரதி மகளிர் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ச்சியாக, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, திருவான்மியூர், சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



பின்னர், இது குறித்து ராதாகிருஷ்ணன் அளித்த பேட்டி:

பார்வையாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் உள்ளிட்ட வாக்குப்பதிவிற்கு தேவையான இயந்திரங்கள் கணினி குலுக்கல் முறையில் வாக்குச்சாவடிகள் வாரியாக தேர்வு செய்யப்பட்டு அந்தந்த சட்டமன்ற தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தொடர்ந்து, வேட்பாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வட சென்னை மற்றும் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிகளில் 3 வாக்குப்பதிவு இயந்திரங்களும், மத்திய சென்னையில் 2 வாக்குப்பதிவு இயந்திரங்களும் தேவைப்படுகிறது. இந்த துணை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் அரசியல் கட்சிகளின் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளின் பாதுகாப்பு அறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நடந்தது. இந்த பணி இன்று (நேற்று) முதல் 3 நாட்களுக்கு நடைபெறும்.

வாக்குப்பதிவிற்கு 11,843 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4,469 கட்டுப்பாட்டுக் கருவிகள், 4,842 வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கை சோதனை கருவிகள் 20% முன்னிருப்பு உள்பட பயன்படுத்தப்பட உள்ளன.

வாக்குச்சாவடி வாரியாக 31 வேட்பாளர்கள் உள்ள மத்திய சென்னையில் 2 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 41 வேட்பாளர்கள் உள்ள தென்சென்னையில் 3 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 35 வேட்பாளர்கள் உள்ள வடசென்னையில் 3 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளன. இதுவரை 16.7 லட்சம் வாக்காளர்களுக்கு பூத் ஸ்லிப் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் 611 பதற்றமான வாக்குச்சாவடிகள், 23 சவாலான வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், கூடுதல் பாதுகாப்பு தேவைப்படும் 10 வாக்குச்சாவடிகளுக்கு மேலுள்ள 135 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 769 வாக்குச்சாவடிகளில் பணி புரிய நுண் பார்வையாளர்கள் மற்றும் காவல்துறை பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசு ஊழியர்களில் இதர மாவட்டங்களில் 6,760 பேர், சென்னை மாவட்டத்தில் 7,965 பேர், பாண்டிச்சேரியில் 10 பேர் என 14,735 அரசு ஊழியர்களிடமிருந்தும், காவல் பணியாளர்களில் இதர மாவட்டங்களில் 14,533 பேர், சென்னை மாவட்டத்தில் 4,538 பேர், பாண்டிச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் 51 பேர் என 19,122 பேரிடமிருந்தும் தபால் வாக்குகளுக்கான படிவங்கள் பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 19,412 பயிற்சி பெற்ற தேர்தல் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
- தபால் வாக்குகளுக்காக இதுவரை 14,735 அரசு ஊழியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.
- 14 கோடியே 72 லட்சத்து 70 ஆயிரத்து 399 ரூபாயை இன்றுவரை தேர்தல் ஆணையத்தின் பறக்கும்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.
- வருமான வரித்துறையினர் ₹19.92 கோடி பறிமுதல் செய்துள்ளனர். ₹59 லட்சத்து 33 ஆயிரம் மதிப்புள்ள மதுபானம் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க இயலாத 85 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான 4,538 தபால் வாக்குகளில் இதுவரை 1003 நபர்கள் வாக்களித்துள்ளனர்.

தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் மூலமாக ரூ.14.73 கோடி, வருமான வரித்துறை சார்பில் ரூ.19.92 கோடி, மதுபானம் மற்றும் போதைப் பொருள் உள்ளிட்ட ரூ.59.33 லட்சம் மதிப்பிலான பொருள்களும், கலால் துறை மூலம் ரூ.1 கோடியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

இவ்வாறு சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் பிரவீன் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) சுரேஷ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மணிவண்ணன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

DEO informs that 16.7 lakhs booth slips were distributed & 1003 postal vote were cast ~~their vote~~ at Chennai.

தினகரன்

11 APR 2024

## விளவங்கோடு இடைத்தேர்தல்

# வாக்குப்பதிவு இயந்திரத்தில் தமிழும், மலையாளமும்...



கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி மற்றும் விளவங்கோடு சட்டமன்றத் தேர்தலையொட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்கள் பொருத்தும் பணி நேற்று நடந்தது. குமரி மாவட்டத்தில் மலையாள மொழி பேசும் மக்களும் பல பகுதிகளில் வசிக்கின்றனர்.

குறிப்பாக கல்குளம், விளவங்கோடு, திருவட்டார் தாலுகாக்களில் மலையாள மொழி பேசும் மக்கள் வசிப்பதால் அவர்களுக்கு வசதியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் தமிழுடன் மலையாளத்திலும் இடம்பெற்றுள்ளது. 22 வேட்பாளர்கள் உள்ளதால் இரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது.

முதல் இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் படம், அவர்களது சின்னம் இடம்பெற்றுள்ளது. அடுத்த இயந்திரத்தில் 17 முதல் 22 வரையிலான வேட்பாளர்களின் பெயர்கள், படம் சின்னம் இவற்றுடன் 23வதாக இவர்களில் எவருமில்லை என்று நோட்டாவும் இடம்பெற்றுள்ளது.

## இதுவரை ₹303 கோடி பணம், பொருள் பறிமுதல்




News regarding Tamil/Malayalam language were used in the EVM in Vilavancode election.

தினகரன்

1 APR 2024

தேர்தல் பாதுகாப்பு பணிக்காக

# 190 கம்பெனி துணை ராணுவ வீரர்கள்

தமிழகத்திற்கு தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 190 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வந்துள்ளனர். இவர்களில் எத்தனை கம்பெனி எந்தெந்த பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறியதாவது:

சென்னை நகரம் - 7 கம்பெனி, ஆவடி நகரம் - 3, தாம்பரம் நகரம் - 3, கோவை நகரம் - 6, திருப்பூர் நகரம் - 3, சேலம் நகரம் - 4, திருச்சி நகரம் - 4, மதுரை நகரம் - 7, திருநெல்வேலி நகரம் - 3, காஞ்சிபுரம் - 5, திருவள்ளூர் - 4, செங்கல்பட்டு - 3, வேலூர் - 5, திருவண்ணாமலை - 5, ராணிப்பேட்டை - 3, திருப்பத்தூர் - 4, விழுப்புரம் - 5, கடலூர் - 5, கள்ளக்குறிச்சி - 3, திருச்சி - 3, பெரம்பலூர் - 3, அரியலூர் - 2, கரூர் - 3, புதுக்கோட்டை - 3, தஞ்சாவூர் - 6, திருவாரூர் - 3, நாகப்பட்டினம் - 2, மயிலாடுதுறை - 2, சேலம் - 5, நாமக்கல் - 3, தர்மபுரி - 4, கிருஷ்ணகிரி - 4, கோவை - 7, ஈரோடு - 4, திருப்பூர் - 5, நீலகிரி - 2, மதுரை - 4, விருதுநகர் - 5, திண்டுக்கல் - 4, தேனி - 6, ராமநாதபுரம் - 4, சிவகங்கை - 4, திருநெல்வேலி - 5, தூத்துக்குடி - 6, கன்னியாகுமரி - 6, தென்காசி - 3 என மொத்தம் 190 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் தேர்தல் பாதுகாப்பு பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

190 paramilitary companies were deployed for elections.